Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-10 | 26-07-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-158

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12150)

------- புலிகளின் போக்குவரத்து விவகாரம்; -------

# கண்காணிப்புக்குழு- அரச தரப்புக்கிடையிலான

# நேற்றைய சந்திப்பிலும் இறுதி முடிவில்லை!

## புலிகளுக்கு அரசிடம் இருந்து புதிய யோசனைகளாம்

(கொழும்பு)

**அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அரச சமாதானச் செயலக அதிகாரிகளையும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடி உள்ளனர். இச்சந்திப்பிலும் இறுதித்தீர்வெதுவும் எட்டப்படவில்லை என போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இந்தச் சந்திப்பு கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதில் அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள், அரச சமாதான செயலகப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆனால் இந்த விடயம் தொடர்பாக இறுதித் தீர்வெதுவும் காணப்படாத நிலையில் அந்தச் சந்திபபு முடிந்துள்ளது.

இதேவேளை இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரச சமாதானச் செயலகப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜோன் குணரட்னகூறுகையில்;அரச தரப்பின் சார்பில் இன்றைய சந்திப்பின்போது

(12ஆம்பக்கம் பார்க்க)

## இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் எதுவுமே இல்லை என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சிறிலங்கா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் எதுவுமே இல்லை என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் டோக்கியோ உதவிவழங்கும் இணைத தலைமையின் நான்கு பிரதிநிதிகள் நேற்று சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போதே சந்திரிகா, இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளதுபோல் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களை அகற்ற சிறிலங்கா அரசு முன்வர வேண்டும் என்று டோக்கியோ உதவி வழங்கும் இணைத்தலைமை தொடர்ந்து வலியுறுத்திவருவது

(12ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு; வவுனியாவில் ஏற்பாடுகள் பூர்த்தி!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் நாளை நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகி உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இவ் வரலாற்று நிகழ்வில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பேராளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இம்மாநாட்டின் இறுதியில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதுடன் முக்கிய பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனையொட்டி வவுனியா நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. வீதிகள் அனைத்தும் சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. (10,21)

## நவம்பரில் சனாதிபதித் தேர்தல்; தேர்தல் ஆணையாளர் தீர்மானம்?

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி தேர்தலை அரசியலமைப்பின் படி இந்த ஆண்டிலேயே நடத்த வேண்டும் என்று அரசாங்கத்திடம் சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியிருப்பதாகத் தெரிகிறது.

சனாதிபதி தேர்தலை இந்த ஆண்டு நவம்பரில் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், அடுத்த ஆண்டே நடத்தப்பட வேண்டும் என்று ஆளும் கட்சியும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

இது குறித்து தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தாமல் தேர்தல் ஆணையாளர் மௌனம் சாதித்து வருகிறார்.

எனினும் அரசியலமைப்பின் படி தேர்தல் இந்த ஆண்டிலேயே நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல்

(12ஆம்பக்கம் பார்க்க)

## சமாதான சூழ்நிலைக்கு பாதகம் ஏற்படுமாயின் சுனாமி அபிவிருத்திப் பணியிலிருந்து விலக நேரிடும்!

### -அமெரிக்க தூதுவர் ஜெப்ரிலங்க்ஸ்டெட் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமாதான சூழ்நிலைக்கு பாதகம் ஏற்படுமாயின் சுனாமிக்கு பின்னரான அபிவிருத்தி பணிகளிலிருந்து தாம் விலக நேரிடுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது. கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜெப்ரிலங்க்ஸ்டெட் ஊடக மாநாடு ஒன்றை நேற்று நடத்தினார்.இதன்போது கருத்துரைத்த அவர், இலங்கையில் சமாதான முயற்சிகளை முன்கொண்டு செல்ல வேண்டியது இரண்டு தரப்பினரதும் பொறுப்பாகும்.

இதனை விடுத்து இரண்டு தரப்பினரும் விரோத மனப்பான்மையுடன் செயலாற்றுவார்களாயின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அது பாரிய பாதகங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அமெரிக்கா, சுனாமிக்கு பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வருகிறது. சமாதானம் இல்லா மல் அதனை முன்கொண்டு செல்ல முடியாது என ஜெப்ரிலங்க்ஸ்டெட் தெரிவித்தார்.


(12ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன், ரஞ்சனுக்கு மேல்நீதிமன்று அழைப்பாணை

அரசு- விடுதலைப்புலிகளுக்கு இடையேயான பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய தரப்பினால் கொழும்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜராகுமாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் வட-கிழக்கு திட்டமிடல் பிரிவைச்சேர்ந்த சண்முகலிங்கம் ரஞ்சன் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றினால் யாழ் நீதிமன்றிற்குதூதர் மூலம் உரியவர்களிடம் சேர்ப்பிக்கக்கோரி இவ் விரு அழைப்பாணைகளும் யாழ். மாவட்ட நீதிமன்றிற்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மிகவும் தாமதமாக வந்தடைந்துள்ள இவ் அழைப்பாணைகளில் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளின் சார்பில் கைச்சாத்திட்டிருந்த வட-கிழக்கு திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த சண்முகலிங்கம்

(12ஆம்பக்கம் பார்க்க)



## தமிழர் சுயநிர்ணயத்தை கோரி முல்லைத்தீவில் மக்கள் பேரணி!

(முல்லைத்தீவு)

சிறிலங்கா அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கையினை எதிர்த்தும் தமிழீழதேசத்தில் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை ச்ர்வதேசத்திடம் கோரியும், பொறுத்தது போதும், போரை தொடங்குமாறு தேசியத் தலைவரிடம் கோரியும் முல்லைத்தீவில் நேற்று பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களும் முல்லை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியமும் இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தன.

காலை 9.30 மணிக்கு முல்லை மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக இருந்து முல்லை வர்த்தக சங்கத்தினரின் தலைமையிலான பேரணியும் செல்வபுரத்தில் இருந்து முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைமையிலான பேரணியும் புறப்பட்டு கோசங்கள் எழுப்பிய வண்ணம் முல்லை நகர மின்சார நிலையத்திற்கு முன்பாக கூடியது.

(12ஆம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**10 நிமிடத்தில் படங்கள்!!!**

பாஸ், சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிட்டல் அல்பம் தயாரிப்பவர்கள் யாழ்ஒளி **K.S.R. PHOTOS** இல 05கனகபுரம் தெரு கிளிநொச்சி. (6384)

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றிற்கு கணினி இயக்குனர் தேவை. தொடர்பு இல:109, இரத்தினாஸ், கண்டிவீதி கிளிநொச்சி.28.07.2005 அன்று 4.00 மணிக்கு நேரில் வரவும். (6391)


# யாழ்.மாவட்டத்தில் 64 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்க நடவடிக்கை

## - அரசாங்க அதிபர் கணேஸ் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

யாழ்-மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களில் 64 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கூறியுள்ளார்.

இவ்64ஆயிரம் குடும்பங்களுக்குமான சமுர்த்தி நிவாரணம் அடுத்த மாதம் முதல் வழங்குவதற்கு ஏற்பாடுகள் துரிதமாக இடம் பெற்றுவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதற்கான நிவாரணமுத்திரைகள் உடனடியாகவே வழங்கப்படவுள்ளன.ஒவ்வொரு குடும்பங் களினதும் பொருளாதார தரத்துக்கு ஏற்றவிதத்தில் 250 ரூபா, 350 ரூபா, மற்றும் 650 ரூபா முத்திரைகளாக இவை வழங்கப்படவுள்ளன.

இடப்பெயர்வால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணம் இடைநிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மக்களைக் காக்கவே இதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என அரச அதிபர் கூறினார். (33,28)

# யாழ்இல் கழிவுகளை அழிக்க பி.சபைகளிடம் காணி இல்லை

## - உ.உ. ஆணையாளரிடம் அறிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

யாழ்-மாவட்டத்தில் இருக்கும் பிரதேச சபைகள் பல தம்மால் அகற்றப்படும் கழிவுகளையும் குப்பை கூழங்களையும் கொட்டி அழிப்பதற்கு போதிய காணி வசதிகள அற்ற நிலையில் உள்ளன.

இதனால் பிரதேச சபைகள் தம் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து அகற்றும் குப்பைகூழங்களையும் கழிவுப் பொருட்களையும் கைவிடப்பட்ட தனியார் காணிகளிலும், அரசகாணிகளிலும், மயானங்களிலும், மைதானம் போன்ற பொது இடங்களிலும் கொட்டி அழிக்கின்றன.

இதனால் சுகாதாரப் பிரச்சினைகளும் மற்றும் பல பிரச்சினை களும் தோன்றியிருப்பதால் தம்மால் அகற்றப்படும் கழிவுகளை கொட்டி அழிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு பிரதேசசபைகளின் செயலாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. இராசையாவிடம் முறையிட்டுள்ளனர். (33)


இன்றைய நாகரிகங்களுக்கு நாடுங்கள்

## படையப்பா பியூட்டி ஹேர் கட்டிங் சென்ரர்

| ஜென்ஸ் பியூட்டி | லேடிஸ் பியூட்டி கட் |
|---|---|
| 01. பிளீச்சிங் | 01. மெசின் கட் |
| 02. பேஷியல் | 02. ஸ்ரைல் கட் |
| 03. பேஸ் மாஸ்க் | 03. பிரியங்கா கட் |
| 04. பேஸ் மசாஜ் | 04 Nike கட் |
| 05. த்ரெட்டிங் | 05 விஜயசாந்தி கட் |
| 06. ஹெட் மசாஜ் கர்லிங் | 06. டயனா கட் |
| 07. ஹேர் ஸ்பிரே ஹேர் | 07. செம்பருத்தி கட் |
| 08. டைஹேர்வுறவுன் டை | 08. பேபி சாளினி கட் |

பிரதான வீதி,
அடம்பன், மன்னார்.
T.P: 0776982876 (சி-12379)

உரிமையாளர்
ம.ஜஸ்ரின்


## அழியா நினைவில் ஆண்டுகள் இரண்டு

இகம் 1925 - 03 - 19

பரம் 2003 - 07 - 19



அமரர்
**வைத்திலிங்கம் செல்லையா**
(மனேச்சர்)

திதி:- 2005.07.26

மக்களை நேசித்த மாண்பாளன்
பொதுப் பணிகளில் தம்மை அர்ப்பணித்து
உழைத்த உத்தமன்
இறுதிமூச்சுவரை மக்கள்பணி
செய்த தக்கோன் எமது
குடும்பத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
வணங்குகின்றோம்.

(6390) குடும்பத்தினர்.

# வடக்குகிழக்குப் பாடசாலைகளில் 286 பேருக்கு ஆசிரியர் நியமனம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஜி.சி.ஈ உயர்தரச் சித்தியுடன் கூடிய 286 ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளனர். இதற்கான அங்கீகாரத்தை கொழும்பு கல்வியமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது. இத்தகவலை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் வெளியிட்டார். நாளை புதன்கிழமை இவ்வாசிரியர்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் கூறினார். மாவட்ட ரீதியில் நியமிக்கப்படவிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம்-50, அம்பாறை-67, மட்டக்களப்பு.62, திருகோணமலை.32,முல்லைத்தீவு.22,கிளிநொச்சி. 16 வவுனியா-25, மன்னார்-12.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டோர் தங்களுக்குரிய நியமனக்கடிதங்களை யாழ்.கல்வி வலயத்திலும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டோர் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையிலும் வவுனியா மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர் வவுனியா தெற்கு கல்வி வலயத்திலும் மன்னார் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர் மன்னார் வலயக்கல்விப்பணிமனையிலும் திருமலை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர்மாகாணக்கல்வி அமைச்சிலும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிமனையிலும் அம்பாறை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர் கல்முனை வலயக் கல்விப் பணிமனையிலும் தங்களின் நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ளலாம். என்றும் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜி.சி.ஈ உ/த சித்தி பெற்றவர்கள் மத்தியில் இருந்து ஆசிரியங்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டது. அப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி தெரிவானவர்களின் பெயர்ப் பட்டியலை கொழும்பு கல்வி அமைச்சு, மாகாணக்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்தது. அதன் படி நியமனம் பெறும் வடமாகாணத்திற்கான ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் மாவட்ட ரீதியில் கீழே தரப்படுகின்றது.

**கிளிநொச்சி மாவட்டம்**

ராஜாஜி ரவிராஜ். ஆறுமுகம் வீதி, நுணாவில் மேற்கு. ஞானசீலன் காண்டீபன் உயரப்புலம், ஆனைக்கோட்டை. பாலசிங்கம் சாந்தரூபன் நான்காம் கட்டை மன்னார் வீதி, பூநகரி. இரத்தினசிகாமணி சகிதன் கொம்மாந்துறை வல்வெட்டித்துறை. குமாரசாமி ரமணன் செல்லவாரிப்பிட்டி கண்டாவளை. சிவசுப்பிரமணியம் சிவசத்திகுமார் இல.20/1, கோட்டைகட்டியகுளம் அக்கராயன்குளம். சுகந்தினி சந்திரதாஸ் இல.94/4 மகளிர் திட்டம் அம்பாள்நகர், திருவையாறு. தருஷிகா ஏகநாதன் புலோப்பளை கிழக்கு, பளை. கைலைநாதன் சரவணன் அளவெட்டி மத்தி அளவெட்டி. தமிழ்ச்செல்வி இரத்தினம் இல.20, குமரபுரம் பரந்தன். வினோதினி கணேசலிங்கம் இல.45 இரத்தினபுரம் கிளிநொச்சி. சிவதர்ஷனி அருட்செல்வன், குச்சவெளி, திருகோணமலை. சுவர்ணலதா ஜெயகாந்தன், இல.389, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி. எழில் சபாரத்தினம், தொண்டமான் நகர், கிளிநொச்சி. ஹேமலதா இராசரத்தினம், இல.85/02 திருவையாறு கிளிநொச்சி. பிரேமிளா ஆறுமுகம், இல.24, யூனியன்குளம், கோணாவில்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

நித்தியானந்தக்குருக்கள் சுதானந்தசர்மா, முருகமூர்த்தி வீதி, சங்கானை. ஆனந்தசிவம் சிவசுதர்ஷன், இல.6/1சந்தானமாதா கோவில் வீதி, சுண்டுக்குளி. சிவதர்ஷினி சதீஸ்குமார், முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. வீரசிங்கம் தயாகரன், இலகடி, கோப்பாய் வடக்கு. தயாபரன் சுதன் இல.119 ஏ, கண்டி வீதி, யாழ்ப்பாணம். நீறா கந்தசாமி, துரை வீதி, 4ஆம் வட்டாரம். குமாரசாமி இந்திரபாலர் இல. 360 திருநகர் யோகபுரம். இரத்தின சபாபதிக்குருக்கள் திருமாறன் வியாபாரிமூலை பருத்தித்துறை. வல்லிபுரம் பிள்ளை சுதர்சன் இல.29,6ஆம் ஒழுங்கை பலாலி வீதி, கந்தர்மடம். உருத்திரமூர்த்தி பிறேமானந் 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. சிவபாதம் சுகந்தன், பழவத்தை பொலிகண்டி. வத்சலா பரமநாதன் 4ஆம் வட்டாரம் முள்ளியவளை. சிவானந்தன் வின்சன் இல 04,பேரின்பநாயகம் லேன் சுண்டிக்குளி. ராதிகா உதயகுமார் மாமூலை முள்ளியவளை. சிவசுப்பிரமணியம் நிரோஜனன் மே/பா பெ.திலகவதி, பிரதான வீதி, சுழிபுரம். வீரசிங்கம் திவ்யநாதன் கௌரி கோட்டம் அல்வாய். சிங்கராசா சேரரூபன் பழைய வீதி, கோப்பாய் தெற்கு.சண்முகநாதன் கடம்பரூபன் இல.11/7 சந்தனமாதா வீதி சுண்டிக்குளி. பரம்சோதி காண்டீபன் இல.679, கொத்தம்பியாகுளம் துணுக்காய். தற்பரசுந்தரம் நிறோஜன் வற்றாப்பளை முள்ளியவளை. கனகலிங்கம் விமல் 9 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. நிவேதினி கனகதுரை அம்பலவன் பொக்கணை முள்ளிவாய்க்கால்.

**வவுனியா மாவட்டம்**

அப்துல் சமத் முகம்மது சப்ரீன் பாடசாலை வீதி பெருக்குவட்டான்.திருமலர் சண்முகசுந்தரம். "இராஜேஸ்வரி மாளிகை" புகையிரத நிலைய வீதி, செல்வரஞ்சினி நடராஜா இல.22ஏ.2/1பாத்தியா மாவத்த களுபோவில. திசாந்தினி சிறீதரன் நாகபூசணி ஸ்டோர்ஸ் சிவன் கோவில் வீதி, தோணிக்கல். ஜெயறஞ்சினி கிறிஸ்ரி ஜோசப் இல.137/03கனறா கொண்வென்ற் லேன் உக்குளாங்குளம். ஹனிபா அமீர்அலி இல.07,2 ஆம் குறுக்குத்தெரு தில்லையடி. முகைதீன் சாகிபு முகம்மது ஜஹ்றான் ஏ.எஸ் குளம் சிலாவத்துறை. நழிறா பேகம் ஆதம்பாவா இல. 379, ஹுசைனியா புரம் பாலாவி. நொய்லின் நிலானி இராசநாயகம், கோவில் புதுக்குளம், வவுனியா. நிலானி சிவகுருநாதன், சென் ஜோசப் வாஸ் வீதி, இறம்பைக்குளம். காந்தரூபசிங்கம் கமல்ஜித், இல 146, வைத்தியசாலை வட்ட வீதி, வவுனியா. இரத்தினவேல் பிரசன்னா, இல 33, பொன்னம்பலம் வீதி, அரியாலை. பிரியதர்ஸனி வேலஞ்சம்மாட்டி, இல 76 ஏ, 6 ஆம் வட்டாரம், உடப்பு. மிப்றா முஹ்சீன், இல 36, போல்ஸ் வீதி, படவிடுதி. செல்லப்பா சபேசன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். பஹ்மியா மீராமுகைதீன், இல 20, 2 ஆம் ஒழுங்கை, பட்டாணிச்சூர். டிலானி குமாரி அம்பலம், மே/பா அம்பலம், நியாப், கச்சேரி. வேலு பெரியசாமி, இல 25, குட்செட் வீதி, வவுனியா. ஞானப்பிரகாசம் மார்க்கஸ் றெட்மண்ட், 22 ஏ. தண்ணீர்தாங்கி வீதி, குருநகர். சுப்பிரமணியம் கலாதீபன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. கணேசமூர்த்தி மதனமௌலி, இல 54/03, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. காராளபிள்ளை தயாபரன், "வளர்மதி வாசா" ஆனைக்கோட்டை. ஆறுமுகம் சண்முகநாதன், பிராமணன் தோட்டம், கரவெட்டி மேற்கு. பாலசுப்பிரமணியம் காந்தரூபன், "சிவபூங்கா" அல்வாய் தெற்கு. தேவராஜா ஜெயதீபன், காளிகோவிலடி, மானிப்பாய் தெற்கு.

**மன்னார் மாவட்டம்**

டிவாஹினி ஜெகதாலினி ஜெகநாதன், இல 8 ஏ, 9 ஆம் ஒழுங்கை, வான் வீதி. சோமசுந்தரம் நித்தியானந்தன், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார். வாசுகி மதியாபரணம், மன்னார் கிளினிக், பெரியகடை. முஷ்தரி பேகம் முகம்மது முஹ்சீன், இல 21/1, 1 ஆம் ஒழுங்கை, அநுராதபுர வீதி. மெக்ளி பெரேரா பிரான்சிஸ் பெரேரா, பிரதான வீதி, பேசாலை. சலமோன் விமலதாசன் பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல். பாறூக் முகம்மது சறூக், கூபா நகர், எம். எஸ். பி வீதி, பள்ளிவாசல் துறை. நிஸ்மியா முகம்மது கலீல், இல 261/ஏ, கொழும்பு வீதி, தில்லையடி. கசுறுத்தீன் முகம்மது பினூஸ்கான், முஹைதீன் நகர், விலுக்க வீதி, வேப்பமடு. முஹம்மது முனாஸ் முஹம்மது றமீஸ், இல 168, கற்பிட்டி வீதி, திகழி ஏத்தாலை. ஹாஜா அலாவுத்தீன் ஸல்மான் பாரிஸ், ஹுசைன் வீதி, தாராபுரம். பி.வி. பாயிதா அப்துல் சமது, இல 300, மூர் வீதி, மன்னார்,

**யாழ்ப்பாண மாவட்டம்**

ரங்கநாயகி காராளசிங்கம், சுப்பர் மடம், பருத்தித்துறை. பாமினி சிவயோகன், "ஆயர்பாடி", துன்னாலை மத்தி. சோபியாழினி குணசிங்கம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். சிவராஜினி துரைராசா, "லிங்கவாசகம்", மானிப்பாய் தெற்கு. சிவாதரி சிவநாதன், கைதடி வடக்கு, கைதடி. ரதிவதனி தம்பிராசா, ஏழாலை கிழக்கு, ஏழாலை. ஷாழினி ஸ்ரீகிருஷ்ணன், பொன்கந்தையா வீதி, நெல்லியடி. பகீரதி பற்குணநாதன், இல 164/9, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். கௌசிகை மகிந்தன், "குறிஞ்சி" அல்வாய் வடக்கு, அல்வாய். காயத்ரி இராசசூரியர், ஏழாலை மேற்கு, சுன்னாகம். சாந்திமதி இராசேந்திரம், பத்தாவத்தை ஒழுங்கை, நீர்வேலி மேற்கு. கவிதா பதஞ்சலி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. அமுதா கருணாகரசிங்கம், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை வடக்கு.ரூபவாகினி சிவசுப்பிரமணியம், வளலாய் ஒழுங்கை, தும்பளை. றெஜினா ஜெயமேரி சில்வேஸ்ரர், சென்பீற்றர் வீதி, நவாலி தெற்கு. ரேணுகா கமலநாதன், இல 17/14, அம்மன் வீதி, திருநெல்வேலி. சுபாசினி நடராஜா, இல 40, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை. பிரியதர்சினி குழந்தைவேல், சிவன்கோயில் வீதி, ஏழாலை மத்தி. மஞ்சுதா நற்குணசிங்கம், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. பிரியதர்ஸினி சின்னப்பன், இல 24/1, குமார வீதி, நல்லூர். மெல்க்கா றுஷாணி விஜயசிங்கம், இல 7/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். பிருந்தா நடராசா, நீர்வேலி மத்தி, நீர்வேலி. சிவதரி கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு. தயாளினி தேவதாசன், இளவாலை வடக்கு, இளவாலை. யசோதா லோகநேசன், "பாக்கிய வாசா" அல்வாய் தெற்கு. சுபத்திரா முருகேசு, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. சுஜித்தா சர்வானந்தன், இல 221/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சிந்துஜா பாலஸ்கந்தன், இல 43/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம். அபிதா இராசதுரை, இல 07, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு. பிரபாஞ்சலி கந்தசாமி, இல 46, முதலாம் ஒழுங்கை, பிரதான வீதி. பிருந்தா ரவீந்திரன், வெளிச்ச வீட்டு ஒழுங்கை, தும்பளை. யூஜின் ஷர்மிலானி மருதநாயகம், இளவாலை மேற்கு, இளவாலை. ஜெனிற்றா வதனி ஜேசுதாசன், கோவிற் குடியிருப்பு, சாவகச்சேரி. பாமினி மயூரகிரிநாதன், பெருந்தெரு, புலோலி தெற்கு, விஜிதா விஜயகுமார், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு. நளாயினி குலசிங்கம், பிள்ளையார் கோவிலடி, இணுவில் கிழக்கு. தேவப்பிரியா தேவராஜா, எம்.பி.ஒழுங்கை, மயிலியதனை. கவிதா கிறிஸ்தோபர், கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. தர்மினி ஜெயச்சந்திரா. வீரபத்திர கோவிலடி, உடுப்பிட்டி. ஸ்ரீறஞ்சனி இராசதுரை, "ராஜவாசா", மணல் ஒழுங்கை, தும்பளை. சுபாசினி வல்லி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை. ரேணுகா போஜன், இல 17, கனகசபை முதலியார் வீதி, மானிப்பாய். தயாளினி கதிர்காமநாதன் "பரியாரியார் வளவு" புலோலி தெற்கு. விஜிதா நடராஜா, தொல்புரம் மேற்கு சுழிபுரம். சந்தானலட்சுமி இராஜேஸ்வரன், அல்வின் வீதி, காரைநகர். தாட்சாயினி நவரத்தினம், இல 11/7 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. தனுஜா சிவசுப்பிரமணியம், பொன்கந்தையா வீதி, நெல்லியடி. பவானி அருண்குமார், யாழ் வீதி, வல்வெட்டித்துறை. யாழினி வீரவாகு, கோவிற்கடவை, துன்னாலை வடக்கு. சுதாஷினி சங்கரப்பிள்ளை, இல 42, டச்சு வீதி சாவகச்சேரி.

# தீவிரவாதிகளுக்குப் பணிந்துவிடமாட்டோம்

# எகிப்து சனாதிபதி முபாரக் உறுதிபட தெரிவிப்பு

(கெய்ரோ)

**எகிப்து நாட்டில் தீவிரவாதிகள் நடத்திய தொடர் குண்டு வெடிப்பில் 90 பேர் பலியான நிலையில். "இப்படித் தாக்குதல் நடத்துவதைப் பார்த்து பயந்து, தீவிரவாதிகளுக்கு பணிந்து விடமாட்டோம்" என்று அந்நாட்டு அதிபர் ஹோஸ்னி முபாரக் கூறியுள்ளார்.**



எகிப்தின் சுற்றுலா நகரமான ஷாம் அல் ஷேக் என்ற இடத்தில் தீவிரவாதிகள் நடத்திய தொடர்குண்டு வெடிப்பில் சுற்றுலா பயணிகள் உட்பட 90 பேர் பலியானார்கள். 200 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஷாம் அல்ஷேக் பகுதியில் இருந்து 35 பேரை பொலிசார் கைது செய்தனர். இந்தச் சம்பவம் பற்றி கேள்விப்பட்ட எகிப்து சனாதிபதி ஹோஸ்னி முபாரக் தன் விடுமுறையை இரத்துச் செய்து விட்டு ஷாம் அல்ஷேக் நகருக்கு சென்றார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்; இந்தப் பயங்கரவாதச் சம்பவத்தைக் கண்டு பயந்து போய், தீவிரவாதத்துக்கு பணிந்துவிட மாட்டோம். தீவிரவாதத்தை வேரறுக்க வேண்டும் என்ற எங்கள் உறுதியை இது மேலும் வலுப்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகளின் இந்த மிரட் டலுக்கு அடி பணியவோ அல்லது அவர்களுடன் சமரசம் செய்து கொள்ளவோ மாட்டோம் என்றார்.



**நேற்று பாக்தாத்தில் தீவிரவாதிகள் சிற்றூர்தி ஒன்றின் உதவியுடன் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் கூடியிருக்கும் பொலிசாரும் அவசர கால மீட்புப் பிரிவினரும், இச்சம்பவத்தில் ஐந்து பேர் பலியானதுடன் மேலும் 12 பேர் காயமடைந்தனர். மேற்படி சிற்றூர்தி முன்னர் அமெரிக்க இராணுவத்தினரின் பாவனையிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

## சுமாத்திராவில் பூகம்பம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் சுமாத்திரா தீவின் வடபகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் பூகம்பம் ஏற்பட்டது. 5.3 ரிச்டர் அளவில் அதன் வீரியம் இருந்தது.

கட்டடங்கள் குலுங்கியபோதும். பெரிய அளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தாய்லாந்தில் சுனாமி எச்சரிக்கை

(பாங்கொக்)

தாய்லாந்தில் சுனாமி ஏற்படலாம் என்று கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் நில நடுக்கம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து தாய்லாந்தில் சுனாமி ஏற்படக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய பேரழிவு எச்சரிக்கை மைய இயக்குனர் பிளோத் பிரசாப் சுரசவாடி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

# 42 பேர் பலி; 25 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் வெடிமருந்து நிரப்பிய பாரவூர்தியில் மனித வெடிகுண்டாக வந்தவர் பொலிஸ் நிலையத்தின் மீது மோதி வெடிக்கச் செய்ததில் 42 பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் பலர் பணியில் இருந்த பொலிசார் எனவும் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. நேற்று முன்தினம் மாலை மூன்று மணிக்கு (இந்திய நேரப்படி மாலை 4.30 மணி) அல்ரஷூத் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே தலைநகரின் தென் கிழக்குப் பகுதியில் அல்மஸ்தல் பகுதிக்கு அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. பொதுமக்களின் 22கார்கள் மற்றும் ஒரு வீடு இந்தச் சம்பவத்தில் தீப்பற்றி எரிந்தது. இத்தகவலை ஈராக் உள்துறை அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார்.



## ஜப்பானில் மர்மக்குண்டுவெடிப்பு

ஜப்பானின் தென்பகுதியிலுள்ள தபால் அலுவலகத்தில் பாரவூர்தி ஒன்றில் வைக்கப்பட்ட குண்டொன்று நேற்றுக்காலை வெடித்துள்ளது.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லையென்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

டோக்கியோவில் இருந்து 90 கிலோமீற்றர் தூரத்திலே இக் குண்டு வெடித்துள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சுற்றுலாப்பயணிகள் வெளியேற்றம்



எகிப்தில் குண்டு வெடித்த சுற்றுலாத் தலத்திலிருந்து ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் மூட்டைமுடிச்சுக்களுடன் சொந்த நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

எகிப்தின் செங்கடல் பகுதியில் ஷாம் அல்-ஷேக் என்ற இடத்தில் சுற்றுலாத் தலம் உள்ளது. அங்கு நடந்த தொடர் கார்க் குண்டு வெடிப்புக்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நூறு பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதனால் பீதியடைந்த பல சுற்றுலாப் பயணிகள், தங்களின் சொந்த நாடுகளுக்கு புறப்பட்டனர். விமான நிலையத்தில் வெளி நாடுகளுக்கு புறப்படும் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகவும், வந்திறங்கும் பயணிகள் எண்ணிக்கை குறைவாகவும் இருந்தது. சுற்றுலாத் துறைக்கு இதனால் ஏற்படும் பாதிப்புக்களை உடனடியாக மதிப்பிட முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மர்மமான வைரஸ் நோய்க்கு சீனாவில் 17 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் 17 பண்ணைத் தொழிலாளர்களை பலி கொள்ளக்காரணமாக இருந்த மர்மமான வைரஸ் தொற்றுப்பற்றி அதிகாரிகள் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தொற்றுக்காரணமாக மேலும் 12 பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில்; இறந்தவர்கள் சார்ஸ் வைரஸ் தாக்கத்தினால் இறந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

உயிரிழந்த பண்ணைத் தொழிலாளர்கள் அந்திராக்ஸ் அல்லது பறவைக் காய்ச்சல் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கலாமென்று சுகாதாரத் திணைக்கள அதிகாரி கூறியதாக செய்திப்பத்திரிகையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் சீனாவில் 2002 ஆம் ஆண்டு சார்ஸ் வைரஸ் தொற்று ஏற்பட்டு சுமார் 30 நாடுகளுக்குப் பரவியுள்ளது. இதன் தாக்கத்திற்கு சுமார் 8500 பேர் உட்பட்டிருந்த போதிலும் 800 பேர்வரை இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## எகிப்து தூதுவர் சுட்டுக்கொலை இணையத் தளத்தில் தெரிவிப்பு

(துபாய்)

ஈராக்கில் கடத்தப்பட்ட எகிப்து தூதர் கொல்லப்பட்டு விட்டதாக, அல்-ஹைதா தீவிரவாத அமைப்பின் துணை அமைப்பொன்று இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

எகிப்து தூதர் இபாப் எல் ஷெரீப். எகிப்து-இஸ்ரேல் இடையில் உள்ள பிரச்சினை தொடர்பாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்திவந்தார். ஈராக்கிற்கான எகிப்து தூதராகவும் ஷெரீப் இருந்தார். இவர் கடந்த சில வாரங்களுக்கு முன் ஈராக் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார். அவர் இன்னும் உயிருடன் இருப்பதாக பல்வேறு தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் அல்-ஹைதா தீவிரவாத அமைப்பின் துணைப்பிரிவு ஒன்று, புதிதாக ஒரு ஒளிநாடாவை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில், எகிப்து தூதர் ஷெரீப் இந்த மாத முற்பகுதியிலேயே கொல்லப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளது. இத்தகவலை எகிப்து வெளியுறவு அமைச்சகமும் பல்வேறு தகவல்களின் அடிப்படையில் உறுதி செய்தது. எனினும், கொல்லப்பட்ட ஷெரீப்பின் உடல் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

# தீவிரவாதி என அப்பாவி கொலை விளக்கமளிக்க பிரேசில் கோரிக்கை

தீவிரவாதி என்று ஒரு அப்பாவியைக் கொலை செய்த பிரிட்டிஷ் அரசு உடனடியாக அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று பிரேசில் கோரிக்கை விடுத்துள்ளது.

லண்டனில் நடந்த குண்டுவெடிப்பை அடுத்து அங்குள்ள ஸ்டாக் வெல் சுரங்க ரயில் நிலையத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் அல்லவா? அவரைப் பற்றி லண்டன் பொலிசார் துப்புத்துலக்கினார்கள். அதில் சுட்டுக்கொல்லப்பட்ட நபருக்கும் குண்டு வெடிப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்ட அந்த நபர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த மின்னியலாளர் ஆவார். அவரது பெயர் ஜீன் சார்லஸ் தி மெனஸ்சஸ் (வயது 27). ஜீன், தெற்கு லண்டனில் உள்ள டுல்சேஹில் பகுதியில் வசித்து வந்தார். சம்பவ நாளான வெள்ளிக்கிழமை காலை அவர் பஸ் பிடித்து ஸ்டாக் வெல் சுரங்க ரயில் நிலையத்துக்கு வந்தார். அப்போது அவரது உடை மற்றும் நடவடிக்கை கொஞ்சம் வித்தியாசமாக இருந்ததால் அங்கு குவிந்திருந்த பொலிசார் அவரை கைது செய்ய திட்டமிட்டனர். பொலிஸ் அதிகாரி ஒருவர் ஜீனை நிற்கும்படி மிரட்டினார்.

பயந்த சுபாவம் கொண்ட ஜீன் உடனே நகரும் படிக்கட்டு மூலம் சுரங்க ரெயில் நிலையத்துக்குள் தப்பிச் சென்றார். பொலிசார் அவரை விரட்டி வந்தனர். ஜீன் ரயிலில் ஏற முயன்றபோது பொலிஸ் அதிகாரி ஒருவர் தானியங்கி கைத் துப்பாக்கி மூலம் ஜீனின் தலைக்கு அருகே துப்பாக்கியை நீட்டி ஐந்து முறை சரமாரியாகச் சுட்டு கொன்றார்.

பயங்கரவாதி என்று நினைத்து ஜீன் கொல்லப்பட்டது பிரேசில் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரேசில் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் செல்சோ அமோரிம் தற்போது ஐ.நா.சபை சீர்திருத்தம் தொடர்பாக பேச இங்கிலாந்து சென்றுள்ளார். பிரேசில் நாட்டுக்காரரான ஜீன் சுட்டுக்கொல்லப்பட்டது பற்றி இங்கிலாந்து நாட்டு வெளியுறவுத்துறை செயலர் ஜேக் ஸ்ராவிடம் அவர் விளக்கம் கேட்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



**கடந்த வியாழனன்று லண்டனில் நடந்த குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து வீதிகளில் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டுள்ள லண்டன் பொலிசார்.**

-யூலை - 27 இல் மாபெரும் எழுச்சி நிகழ்வு-

# சிறிலங்கா அரசின் செயலற்ற தன்மையை வவுனியா பேராளர் மாநாடு எடுத்தியம்பும்!

(வவுனியா)

சிறிலங்கா அரசின் செயலற்ற தன்மையை உலகெங்கும் கூறுவதற்காக, சிறிலங்கா அரசின் மீது தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பதை பிரகடனப்படுத்துவதாக வவுனியா பேராளர் மாநாடு அமையும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாவது வட்டுக்கோட்டை மாநாடு என்று அழைக்கப்படுகிற வவுனியா பிரகடன மாநாடு ஏன் நடத்தப்படவுள்ளது என்பது குறித்து செல்வம் அடைக்கலநாதன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழ் பேசும் மக்களின் பேராளர் மாநாடு நாளை வவுனியாவில் நடைபெறவுள்ளது. வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களை உள்ளடக்கி இந்த மாநாடு நடத்தப்படும்.

கடந்த மூன்று வருடங்களில் அமைதிப் பேச்சுக்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் இந்த மாநாடு கூட்டப்படுகின்றது.

கடந்த மூன்று வருடங்களில் எங்களுடைய உரிமைகளை மீள் கட்டமைப்பு, ஆழிப்பேரலைக்கான கட்டமைப்பு போன்றவற்றின் பெயரில் நாடகமாடி சிறிலங்கா அரசு மறுத்து வருகின்றது.

சிறிலங்கா அரசின் செயலற்ற தன்மையை உலகெங்கும் கூறுவதற்காக சிறிலங்கா அரசின் மீது தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பதை பிரகடனப்படுத்துவதாக இந்த மாநாடு அமையும்.

இம் மாநாட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழீழத்தின் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் பங்கேற்பர். முக்கிய விருந்தினர்கள், ஊடகவியலாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். வட்டுக்கோட்டை தீர்மானம் என்று கூறப்படுகின்ற அந்தத் தீர்மானம் இப்போதும் பேசப்படுகின்றது.

அதேபோன்று வவுனியா தீர்மானம் என்றுவரலாறு பேசப்படுகின்ற அளவுக்கு இந்த மாநாடு நடைபெறும் என்றார் அவர்.

தமிழீழத் தேசிய வரலாற்றின் திருப்புமுனையாகக் கருதப்படுகின்ற வவுனியா பிரகடன மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. புகையிரத நிலைய வீதியில் உள்ள முத்தையா மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச. குலதேவராசா, தமிழ்க்காங்கிரஸ் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் எஸ். என்.ஜி.நாதன், ஏற்பாட்டுக் குழுத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞா. அலை, தேசிய எழுச்சிப்பேரவைகளின் பொறுப்பாளர் உமைநேசன் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் பேராளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். 14 முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு இறுதியில தமிழ்த் தேசிய பேரெழுச்சி பிரகடனம் வெளியிடப்படும்.

இதை சர்வதேச சமூகத்திற்கும் வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 23 ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்காவின் வெலிக்கடை சிறையில் 53 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட துயர நாளான ஜூலை 27இல் தமிழர் விடுதலையை உரத்து முழக்கமிட்டுச் சொல்கின்ற இந்தமாநாடு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை சர்வதேசத்திற்கு இன்று உணர்த்தியிருக்கின்றோம்

– கரடியனாறில் மட்டக்களப்பு கட்டளைத் தளபதி



மட்டக்களப்பு கரடியனாறு பகுதியைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட 66 வறிய குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை ஊக்குவிப்பு பணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே

(மட்டக்களப்பு)

**"இந்த மூன்று வருட சமாதான காலத்தில் நாங்கள் பெற்றது எதுவும் இல்லை. இருந்தும் எங்களுடைய போராட்டம் பற்றிய உண்மைத் தன்மையை, நேர்மைத் தன்மையை, தமிழ் மக்கள் மீது நடக்கின்ற கொடுமைகள் பற்றி சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தியிருக்கிறோம். சர்வதேசமும் இதை உணர்ந்திருக்கிறது" என மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.**

கேணல் பானு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி அழிவால் மட்டக்களப்பு மாவட்டம் பெரும் சேதத்தையும் அழிவையும் பெரியளவில் சந்தித்தது. அதே போன்று அம்பாறையில் எமது மக்கள் பெரிய அழிவைச் சந்தித்தனர்.

ஆனால் அந்த மக்களுக்கு ஒரு நிவாரணப்பணியை மேற்கொள்ள அனைத்துலக நாடுகள் வழங்கிய பல உதவிகளை இன்று சிறிலங்கா அரசு முடக்கி வைத்திருக்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள இருக்க இடம் இல்லாமல் தறப்பாளுக்குள்ளும் கொழுத்துகிற வெயிலிலும் கொட்டும் மழைக்குள்ளும் இருந்து தங்களுடைய வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கும் பொழுது மறுபக்கம் யுத்தக்கப்பல் வாங்குகிறார்கள். சமாதானத்தைப் பேசிக் கொண்டும் யுத்தக் கப்பலை வாங்குகிறார்கள். ஆயுதங்களை வாங்குகிறார்கள். குண்டு போடுகிற விமானங்களை வாங்குகிறார்கள் இவை எல்லாம் ஏன் அவர்களுக்கு? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

## மின்சாரம் தாக்கி மாணவன் பலி

மட்டக்களப்பு நகரிலுள்ள தேசிய பாடசாலை ஒன்றின் விடுதியில் மின்சாரம் தாக்கியதில் மாணவன் ஒருவர் பலியானார். நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒன்பதாம் ஆண்டில் கல்வி பயிலும் வாகரையைச் சேர்ந்த ரவீந்திரன் துசான் என அடையாளம் காணப்பட்டார்.

## சனசமூக கலாசார மண்டபம் அமைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடாவில் கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சனசமூக கலாசார மண்டபம் ஆறு இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் நிலையை கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் வதிவிட மட்டக்களப்பு நகர காரியாலயம் சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியில் கட்டடத்தின் பணிகள் யாவற்றையும் மேற்கொண்டு வருகிறது. இக்கட்டட வேலைகள் ஓகஸ்ட் மாதம் முடிவிற்குள் பூரணப்படுத் தப்படுமென மட்டக்களப்பு நகர முகாமையாளர் எஸ். ஜெயராம் தெரிவித்தார்.

# நேர்முகத் தேர்வுக்கு அனுமதி கிடைக்காத ஆசிரியர்கள் மேன் முறையீடு செய்யலாம்

- தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(திருமலை)

வட கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தகுதி இருந்தும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமல் தவறவிடப்பட்டிருந்தால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு மேன் முறையீடு செய்யலாமென தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

01.10.2000ற்கு முன்பு 180 நாட்கள் தொடர்ச்சியாக கடமையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மேற்படி தகுதிகள் இருந்தும் பல ஆசிரியர்கள் தங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் வரவில்லையென தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். அதனையடுத்து சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வட கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தைச் சந்தித்து கலந்துரையாடினார் அதன் போது மேன்முறையீட்டுக்கான இணக்கத்தைத் தெரிவித்தார். எனவே அப்படிப்பட்ட ஆசிரியர்கள் உடனடியாக 180 நாட்கள் கடமையை உறுதிப்படுத்தி அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வட கிழக்கு மாகாண கல்விச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும் பிரதியை எமக்கு அனுப்பினால் துரித நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

## மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வன்னி புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன், வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சதாசிவம் கனகரட்ணம், வினோநோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## கல்குடா வலயப் பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் அன்பளிப்பு

(மட்டக்களப்பு)

கல்குடா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் பாவனைக்கென முதலுதவிப் பெட்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. கோறளைப் பற்றுக் கல்விக் கோட்டத்துக்கான முதலுதவிப் பெட்டிகளை கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாயன்று வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

ஆசிரியர்களை அழைத்து முதலுதவிப் பெட்டி பாவனை தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு வழங்கப்பட்ட இந்நிகழ்வை மெடிக்கோடோ முன்டா என்ற அரசசார்பற்ற நிறுவனம் நடாத்தியது. இந்நிகழ்வில் வைத்தியர்களும், உளவியல் பணியாளர்களும் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர். முடிவில் சுமார் ரூபா 3000 பெறுமதியான முதலுதவிப் பெட்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்க அடிக்கல் நாட்டல்

(மட்டக்களப்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பூநொச்சிமுனை கிராம மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுதலும், மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் செ.சீசர், எமேஜன்சி இத்தாலி நிறுவன இணைப்பாளர் கார்லோ குறோஸ், பள்ளிவாசல் மௌலவி, கிராம உத்தியோகத்தர், மீனவர் சங்க உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் போன்றோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பள்ளிவாசல் மௌலவி கருத்துக் கூறுகையில்;

சுனாமியால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு எந்த உதவிகளும் இன்றி தத்தளிக்கும் வேளையில் குழந்தைகளுக்குத் தேவையான பால்மா முதல் பலதரப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எமக்கு தற் காலிக வீடுகளை அமைத்துத் தந்தது மட்டுமன்றி தற்போது நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுகின்றது. எனவே இந்தக் கிராம மக்கள் என்றுமே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம் என்றார்.

அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் செ.சீசர் உரையாற்றுகையில்; பூநொச்சிமுனைக் கிராம மக்களின் அனைத்து நலனிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அக்கறையுடன் செயற்படும். இம்மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே நாம் எமேஜன்சி இத்தாலி நிறுவனத்தின் அனுசரணையில் இத்திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துகின்றோம். இது வீட்டுத் திட்டம் மட்டுமன்றி கிணறுகள் அமைத்தல், நீர்த்தாங்கி அமைத்தல், கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல், பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வசதிகள், முன்பள்ளி, சுகாதார நிலையம், வீதி புனரமைப்பு, சனசமூக நிலையம், பெண்கள் உதவித் திட்டங்கள், தொழிற் பயிற்சிகள், விவசாயக் கடன்கள் போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் பூநொச்சிமுனைக் கிராமத்தை மீண்டும் கட்டி யெழுப்புவதன் மூலம் சகல வசதிகளும் அடங்கிய கிராமமாக இது திகழுமென உறுதி மொழியளித்தார். அடுத்து வைபவ ரீதியாக ஏ.வீ.எம்.அப்துல்லா, முகம்மது எம்.எஸ்.எம்.இப்றாகிம் ஆகியோரின் வீடுகளிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது அதனைத் தொடர்ந்து மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# பொன்னாலை, காரைநகர் மக்கள் நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(வலி. மேற்கு)

**பொன்னாலை, காரைநகர் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து தொல்புரம், மூன்கோடை, மூளாய், போன்ற இடங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு உலருணவு நிவாரணம் நிறுத்தப்பட்டிருக்கின்றது என்று அக் குடும்ப அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.**

கடந்த 1990 களின் பிற்பகுதியில் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களான தொல்புரம், மூன்கோடை மூளாய் ஆகிய பகுதிகளில் வசித்து வந்த நாம் மீண்டும் 1995 இல் நடைபெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் வன்னி மண்ணுக்கு இடம் பெயர்ந்தோம்.

சமாதான சூழலையடுத்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய நாம் முன்னர் இடம் பெயர்ந்திருந்த இடங்களான தொல்புரம் முன் கோடை, மூளாய் ஆகிய பகுதிகளில் மீளவும் குடியமர்ந்தோம்.

இந் நிலையில் மீளக்குடியமர்வுப் பணமாக 25.000 ரூபாபணத்தை தந்து விட்டு நீங்கள் மீளக்குடியமர்ந்து விட்டீர்கள். என்று நிவாரணத்தை நிறுத்தியிருக்கின்றார்கள்.

மேற்படி தகவலை கிராம சேவையாளர் பிரதேச செயலர் போன்றோர் முன்கூட்டியே தெளிவாக எடுத்துக் கூறியிருந்தால் நாம் அந்த மீள்குடியமர்வுப் பணத்தை பெற்றிருக்க மாட்டோம்.

நாம் வறுமையால் வலுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மீளவும் நிவாரணத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (37)

# முகமாலையில் படையினரால் சிறுவன் தடுத்து வைப்பு

## பெற்றோர் முறைப்பாடு

(தென்மராட்சி)

முகமாலைச் சோதனை சாவடியூடாக உறவினரைப் பார்க்கச் சென்ற சிறுவன் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் அல்லாரையில் இருந்து முகமாலை சோதனைச் சாவடி ஊடாக வன்னிக்குச் சென்ற கருணாகரன் சசிகரன் (வயது 16) என்ற சிறுவன் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இச்சிறுவனின் பெற்றோர் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில், முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி உறவினரைப் பார்க்கச் சென்ற தங்களுடைய மகனை முகமாலை சோதனை நிலையத்தில் பொலிசார் தடுத்து வைத்து விசாரித்ததை சிலர் பார்த்திருப்பதாகவும்,தங்களுடைய மகன் முகமாலைச் சோதனைச் சாவடியை விட்டு உறவினர் வீட்டுக்குச் செல்லவில்லை. அல்லது வீட்டுக்குத் திரும்பிவரவில்லை என்றும் பெற்றோர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளனர். அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் முறையிடப் போவதாக தெரிவித்துள்ளனர். (28)

# தென்மராட்சியில் 16 முன்பள்ளிகளுக்கு 8 இலட்சத்து 10 ஆயிரம்ரூபா நிதி

## பா.உ.ரவிராஜ் ஒதுக்கினார்

தென்மராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஊடாக 16 முன்பள்ளிகளுக்கு எட்டு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிர்தேசத்தில் உள்ள பதினாறு முன்பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டவும், மின்சார இணைப்புகளைப் பெறவும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் அவர்களால் எட்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது. அல்லாரை, சங்கத்தானை இயற்றாலை, கைதடிவடக்கு,கைதடி கிழக்கு, கெற்பெலிமத்தி, மட்டுவில், மந்துவில், மீசாலைவடக்கு குடமியம்நாவற்காடு, சரசாலைமட்டுவில்,இடைக்குறிச்சி போன்ற இடங்களில் உள்ள முன்பள்ளிகளுக்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# நவீன வடிவமைப்பில் பண்ணைப் பாலம் விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## வீதி அபிவிருத்தி அதிகார சபை தகவல்

(வலி.மேற்கு)

யாழ். நகரிலிருந்து தீவுக் கூட்டங்களை இணைக்கும் பிரதான வீதியாக இருக்கும் பண்ணை வீதியிலுள்ள பாலம் மூன்று கோடி ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இத் தகவலை வீதி அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டிருக்கின்றது.

இப் பாலம் நவீன வடிவமைப்பில் புனர்நிர்மாணம் செய்யப்படவிருக்கின்றது. புனரமைப்பு வேலைகள் மிகத் துரித கதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தம் காரணமாக மிகச் சேதமடைந்த நிலையில் காணப்படும் பாலங்களில் ஒன்றாகப் பண்ணைப் பாலமும், விளங்குகின்றது. இதனால் பாதுகாப்பற்றதொரு பாலமாகவும், இப்பாலம் இருந்து வருகின்றது.

இப்பாலத்தை புனரமைப்பு செய்வதன் மூலம் யாழ். தீவுப் பகுதிகளான நெருக்கடிகளற்ற பாதுகாப்பான போக்குவரத்துச் சேவைகளை வழங்க முடியும் என்று போக்குவரத்துத் துறை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (37)

# கைதடி வடக்கு பேருந்துசேவை நவபுரம் வரை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இருந்து கைதடி வடக்கு வரை நடத்தப்பட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்துச். சபையின் பேருந்துச்சேவை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபை செயலாற்று முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அந்த வகையில் யாழ்.நகரில் இருந்து தினமும் கைதடிவடக்கு வரை நடத்தப்பட்டு வந்த பேருந்து சேவை கைதடி வடக்கிலிருந்து 2 1/2 மைல்களுக்கு அப்பால் உள்ள நவபுரம் வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிமக்களின் நீண்டகால கோரிக்கைகளின் பிரகாரம் இந்தச் சேவை நீடிப்புச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# அங்கவீனர்களின் உரிமைகளை பாதுகாக்க குழுக்கள் அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற அங்கவீனர்களின் சமூக பொருளாதார வாழ்வியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விசேட குழுக்கள் நியமிக் கப்படவுள்ளன.

சமூகத்தில் வாழ்கின்ற அங்கவீனமானவர்களை ஒன்று திரட்டி அவர்களைக் குழுக்களாக அமைத்து அக்குழுக்கள் மூலம் அங்கவீனர்களது உரிமைகளைப் பேணும் வகையில் இதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட ஜெய்ப்பூர் செயற்கை அவயப் பாவனையாளர் சங்கம் ஈடுபடத் தொடங்கியுள்ளது. (33)

# ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தொடர்ந்தும் பணி புரியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தனது பணிகளிலிருந்து வெளியேற வேண்டும் என வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என ஹலோ ட்ரஸ்ட் செயற்பாட்டு முகாமையாளர் பீப்ள்ஸ் கெடம் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் முன்னுரிமை அடிப்படையில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும், இப் பணிகளுக்கு சகலரும் பூரண ஒத்துழைப்பை வழங்கிவருவதாகவும், தெரிவித்துள்ள அவர் இதுவரையில் யாழ். குடாநாட்டில் சுமார் 38 ஆயிரத்திற்கும் அதிகமான மிதிவெடிகளை அகற்றியுள்ளதாகவும், இதற்காக 371 உள்நாட்டு தொழிலாளர்கள் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணியாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இவர்களைக்கண்காணிக்க இரண்டு வெளிநாட்டு அதிகாரிகள் இருப்பதாகவும், மக்கள் விவசாயம் செய்யும் நிலம் மற்றும் மக்களுக்கு அத்தியாவசியமான இடங்களை முன்னுரிமைப்படுத்தி தமது பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் பீப்ள்ஸ் தெரிவித்துள்ளார். (32)

# தனியார் சிற்றூர்தி ஓட்டுநர்களுக்கு யாழ்.இல் இரண்டாம் கட்டப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்போக்குவரத்து சேவையில்ஈடுபடும் தனியார் சிற்றூர்திகளின் ஓட்டுநர்களுக்கு விசேட ஓட்டுநர் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சிற்றூர்திகளால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காகவும் சிற்றூர்தி ஓட்டுநர்களது கைதொழில் தரத்தினை மேம்படுத்துவதற்காகவுமே இப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் இந்த விசேட ஓட்டுநர் பயிற்சியின் முதற் கட்டம்வடபிராந்திய போக்குவரத்து சபையின் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியின் அனுசரணையுடன் ஏற்கனவே நடத்தப்பட்டதாக சிற்றூர்திச் சங்கத்தினர் கூறினர்.

தொடர்ந்தும் இவ்வாறான பயிற்சிகள் சிற்றூர்தி ஓட்டுநர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (33)

# சேதமடைந்த கழிவு நீர் வடிகால்களை புனரமைக்க யாழ். மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் கழிவு நீர் வடிகால்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா கூறினார்.

இந்தக் கழிவு நீர் வடிகால் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு நோர்வே அரசு நொராட் திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்க முன் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ். நகரில் இருக்கின்ற பெரிய மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான கழிவு நீர் வடிகால்களில் 75 வீதமானவை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் சேதமடைந்து போய;ள்ளன.

இதனால் வடிகால்களுள் கழிவு நீர் தடைப்பட்டு தேங்கி பெரும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது. இந்தநிலைமைகளை கவனத்தில் கொண்டே நொராட் திட்டத்தின் கீழ் இவ் வடிகால் புனரமைப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(33)

# த.பு கழகத்தால் தற்காலிக வீடுகள் திருமலை– சலப்பையாறு மக்களிடம் கையளிப்பு

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் நோர்வே நாட்டு நிதிப் பங்களிப்புடன் தற்காலிக வீடுகள் அமைக்கும் செயற்பாடுகளை திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வீரஞ்சோலை மக்களுக்காக சலப்பையாறு எனும் கிராமத்தில் அமைக்கப்பட்ட 92 தற்காலிக வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டம் அலுவலர் கலைவர்ணன் தலைமையில் இடமபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக குச்சவெளிப் பிரதேச செயலாளர் செல்வரட்ணம் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி சிறப்புரையாற்றினார். அக்ஷன் பாம் பிரதிநிதி முதலாவது வீட்டின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் வீரஞ் சோலை கிராம சேவையாளர் பத்மநாதன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் குடியிருப்பு மக்களெனப்பலர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துக்கூறிய பிரதேசச் செயலாளர் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு இது தற்காலிக வீடாக அமைகின்ற போதிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் நிரந்தர வீடுகள் கிடைக்கும் வரை இந்த இடத்தைப் பேணிச் சுத்தமாகப் பராமரிக்குமாறும் கூறிய அவர் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்ளவிருப்பதோடு தற்காலிக வீடுகளில் குடியேறிய இந்த மக்களுக்கான வருமான அதிகரிப்புத் திட்டத்தினையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், குறிப்பிட்டிருந்தார்.

# இந்திய - அமெரிக்க நல்லுறவில் சந்தேகம்!

இந்திய அரசியலில் பிரதமர் மன் மோகன்சிங்கின் அமெரிக்கப் பயணம் "கிணறு வெட்டப் பூதம் " கிளம்பிய கதையாகியுள்ளது. பயணம் குறித்து மிகுந்த எதிர்பார்ப்புக்கள் நிலவும் என்று எதிர்பார்த்தால் ...... பெரியளவில் சர்ச்சைகளே தலைதூக்கியுள்ளன எனலாம்.

அந்த வகையில் பிரதமர், அமெரிக்கா வுடனான நேசக்கரத்தை பற்றிவிடப்போவ தாகவே பயணமானார். ஆனால் பயணம் முடிந்து இந்தியா திரும்புவதற்குள், அவரது பயணம் குறித்த சர்ச்சைகள் எழுந்துவிட்டன.

பிரதான எதிர்க்கட்சியான தேசிய ஜன நாயக கூட்டணியும், கூட்டணிக்கட்சிகளான இடது சாரிகளுமே போர்க் கொடி தூக்கியிருக் கின்றன என்பது மத்திய அரசிற்கு சிக்கலான விடயம்தான்!.

இந்திய- அமெரிக்க உறவை மேம் படுத்துவதாக சென்ற பிரதமர் மன்மோகன் சிங். இந்திய வெளியுறவுக் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு,அமெரிக்காவின் பக்கம் சாய்ந்து விட்டதாக மார்க்சிஸ்ட் கட்சி குற்றச் சாட்டை முன்னெடுத்திருக்கின்றது.



அமெரிக்காவில் மன்மோகன்சிங்

இதேபோல்,ஒருதலைப்பட்சமாக கூட்டணிக் கட்சிகளைக் கலந்தாலோசிக்காது, அமெரிக் காவின் முடிவுகளை பிரதமர் தலைமேல் கொண்டுவந்துள்ளதாக கம்யூனிஸ்ட்கட்சி போர்க் கொடி தூக்கியிருக்கின்றது.

வழமையாக ஆளும் கட்சி மீது எதிர்க் கட்சிகள்தான் குற்றச்சாட்டுக்களை அடுக்குவது வழமை. ஆனால் பிரதமரின் அமெரிக்க பயணம் குறித்து கூட்டணிக் கட்சிகளே முதலில் தமது எதிர்ப்பினைக்காட்டியிருப்பது கவனிக்கத் தக்கது

கடந்த வாரம் பிரதமர் மூன்று நாட்கள் அமெரிக்காவுக்கு பயணத்தை மேற்கொண்டி ருந்தார். அமெரிக்கா செல்வதற்கு முன்னர் அமெரிக்காவுடன் நேசக்கரம் பற்றும் விடயங் களைப் பட்டியலிட்டிருந்தார்.

0 பொருளாதார மேம்பாடு

0 ஜனநாயகத்தை நிலைநாட்டல்

0 எயிட்ஸ் ஒழிப்பு

0 விவசாயக் கல்வி மற்றும் ஆராய்ச்சி

0 அறிவியல் தொழில் நுட்ப துறையில் இருதரப்பு உறவு மேம்பாடு.

0 விண்வெளி விஞ்ஞான ஒத்துழைப்பு.

0 ஆக்கபூர்வ அணுசக்தி ஒப்பந்தம்.


ஆனால், அமெரிக்க மண்ணில் கால் பதித்ததும் அதன் வாசனையோ தெரிய வில்லை. பிரதமர் மேலே கூறிச் சென்ற பல் ஆறு விடயங்களுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவற்றின் பின்னால் மிக கடைசியாக இருக்கும் "அணு சக்தி ஒப்பந்தம்" மிக முதன்மையானதாக மாறி விட்டது போலும்.

அத்துடன் அமெரிக்காவில் மன் மோகன்சிங் பேசியவையே அவரா.....இவ்வாறு எல்லாம் பேசியுள்ளார்......என்று பலரையும் மூக்கு மேல் விரலை வைக்கும் நிலைக்குத் தள்ளி இருக்கின்றது.

ஏனெனில் அமெரிக்க சனாதிபதி புஷ் போன்றே பிரதமரும் உலக பயங்கரவாதம் குறித்தே கூடுதலாக குரல்கொடுத்திருக்கின்றார். இதற்கு காரணம் பாகிஸ்தானை இலக்கு வைத்தேதான் என்று எவருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை எனலாம்.

ஏற்கனவே ஜீ-8 மாநாட்டிலும் பாகிஸ் தானைச் சுற்றி வளைத்துதான் பிரதமர் மன் மோகன்சிங் பேசியிருக்கின்றார் என்பது இப்போது நிரூபணமாகி இருக்கின்றது. ஏனென்றால் அமெரிக்காவிலும் தமது அய லிலும் பயங்கரவாதம் தலை விரித்தாடுவதாக பிரதமர் மன்மோகன்சிங் கூறியிருக்கின்றார்.

ஏற்கனவே பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைபிரியாத நண்பர்கள் என்பது பிரதமருக்கு தெரியாத விடயமல்ல. ஆனால் எதிரியின் நண்பனை தனக்கு நண்பனாக்கி எதிரியை அழிப்பது இராஜதந்திரமே என்றேபிரதமர் அமெரிக்காவிடம் இருகரம் கொடுத்துள்ளதாக கூட நம்பப்படுகின்றது.




அந்த வகையில் தான் தீவிர வாதம் குறித்து பிரதமர் அமெரிக் காவுடன் சேர்ந்து அழிக்கப்போவதாக சபதமிட்டுள்ளார். என்றும்,இந்தியாவுக்கு வெளிநாட்டு முதலீ டுகள் தேவையாக இருப்பதனால் அமெ ரிக்காவிடம் அதனை எதிர் பார்ப்பதாகவும், தூண்டில் போட் டிருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தரப்பில் எதிர்பார்க்கலாம்.

ஆனால் அமெரிக்காவாவது இந்திய தூண்டிலில் மாட்டுவதாவது. ஏதோ உள் நோக் கோடுதான் இந்தியாவுடன் நட்புக்கரம் கோர்த் திருப்பதாக அரசியலில் கருத்து கூறப் படுகின்றது.

ஏனெனில் 1974 ஆம் ஆண்டு பொக் ரானில் அணுகுண்டு சோதனையினை இந்தியா மேற்கொண்டிருந்தது. அணுகுண்டு வெடித்து ஓய்ந்ததும் அமெரிக்கா இந்தியா மீது பொரு ளாதாரத் தடையினையும், அணுசம்பந்தப்பட்ட எந்த உதவியையும் பிறநாடுகள் வழங்கக் கூடாது என்றும் தடைவிதித்துள்ளது.

இதனால் இதுவரை காலமும் இருநாட்டு உறவுகளும் ஓடும் புளியம்பழமுமாகவே இருந்து வந்தமை யாவரும் அறிந்த தொன்றே. இப்போதோ நிலைமை தலை கீழாக மாறி விட்டது.


அமெரிக்காவின் அன்பு வலையில் இந்தியாவும் அடக்கம். அதனால்தான் இந்தியா மீதான தடை தகர்க்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமா...... தாராபூர் அணுமின் நிலையத்திற்குத் தேவையான எரிபொருளைக் கூட அமெரிக் காதான் வழங்க இருக்கின்றது என்றால் அமெரிக்காவின் இந்திய கரிசனையினை என்னென்பது...?

இதனால் தான் இந்திய அணு மின் நிபுணர்கள் கூட அமெரிக்காவின் கரிசனை குறித்து சந்தேகம் எழுப்பி இருக்கின்றனர்.

அந்த வகையில் ,ஏற்கனவே சீனா வுடன் அமெரிக்கா சுமூகமான நட்பை பாராட்ட வில்லை. இந்தியாவுடனும் அந்த நிலைதான் இருந்து வந்திருக்கின்றது. இருநாடுகளும் இப்போது வளர்ச்சிப் பாதையில் கிடுகிடுவென வளர்ந்து வருவது, அமெரிக்காவைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது.

எனவே இந்தியாவுடன் கைகோர்த்து சீனாவை தனிமைப்படுத்துவதே அமெரிக்க ராஜதந்திரம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

அதனால்தான் கடந்த 30 ஆண்டுகளாக அமெரிக்காவின் பார்வையில் தூரத்தில் இருத்தி வைக்கப்பட்ட இந்தியா, இன்று பக்கத்து கதிரைக்கு தூக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. என்றால் "அமெரிக்காவை பொறுத்தவரை சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்பதுதான்!.



கம்யூனிஸ்டுக்கள்

இதனைத்தான் எதிர்க்கட்சிகளும் இடது சாரி கட்சிகளும் இயம்புகின்றன. எதிர்க் கட்சி களைப் பொறுத்தவரை அணு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா ஒப்பந்தம் செய்திருப்பது தனக்கான அனுகூலங்களை முன்னிட்டே. இத னால் இந்தியாவுக்கு பிரதி கூலங்கள்தான் மிச்சம் என்பது வாஜ்பாயின் எதிர்ப்பலைக்குப் பின்னாலுள்ள கருத்து.

அத்துடன் தோரியம் ஆய்வு தொடங்கப் போவதாக கூறிய ஆளும் கட்சி இப்போது அது பற்றி வாயே திறக்காதது ஏன் என்று புரி கின்றது.. என்றும் எதிர்க்கட்சி குற்றம் சுமத்தி இருக்கின்றது.

ஆரம்பத்தில் ஈரானில் இருந்து குழாய் மூலம் காஸ் கொண்டுவரும் திட்டத்தை தொடங்கவுள்ளதாக பரபரப்பாக இந்திய மத்தி யரசு கூறியது.

ஆனால் இப்போது அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டதோ.... எனும் சந்தேகம் எழுந்திருக்கின்றது.

அதற்குக் காரணம் ஈரானிலிருந்து குழாய் வழியாக காஸ் கொண்டு வரப்படும்போது அமெரிக்கா பொருளாதாரத் தடையினை மீண் டும் கொண்டு வந்து விடும் எனும் அச்சமே... என்றே இடது சாரிகள் முணுமுணுக்கின்றனர்.

அத்தோடு ஐ.நா.சபையில் நிரந்தர உறுப் புரிமை அந்தஸ்து வாங்கித்தர பின்னடிக்கும் அமெரிக்காவுக்காக, ஐக்கிய முற்போக்கு கூட்டணி தமது கொள்கைகளை நிறை வேற்றுவதில் இழுத்தடிப்பு செய்வதை தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அவை குமு றுகின்றன.

எரிசத்தி சுற்று சூழல் பாதுகாப்பில் கியோட்டோ ஒப்பந்தத்தை நிறைவேற்ற விடாது தடையாக இருப்பதே அமெரிக்காதான். அப்படி



இருக்கும்போது ஒரு தலைப்பட்சமாக பிரதமர் மன்மோகன்சிங் ஒப்பந்தத்தை கைச்சாத் திட்டுள்ளார். என்றும் இடது சாரிகள் குரல் உயர்த்தி இருக்கின்றன.

ஏற்கனவே எப்-16 ரகப்போர் விமானத்தை அமெரிக்காவிடம் வாங்குவதற்கு இடதுசாரிகள் உடன்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மத்தியரசில் கூட்டணி வகிக்கும் கட்சிகளுடன் ஒத்துப் போகாமல் அவற்றுடன் முரண்பாடுகளை வளர்ப்பது ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு பாதகமானதே என்பதை காங்கிரஸ் அறியாதது அல்ல.

அது மட்டுமன்றி தங்களுடன் கலந்து ஆலோசனை செய்யாது எப்படி பிரதமர் இவ்வாறான முடிவுகளை எடுத்திருக்க முடியும்........? என்பதும் இடதுசாரிகளிடையே நிலவும் கசப்பாகவுள்ளது.

அ.கலைவாணி

அதே போன்று எதிர்க்கட்சிகளும் மழைக் கால கூட்டத் தொடரை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தப் போவதாக கூறியிருக்கின்றன.


இடதுசாரிக் கட்சிகளும் மழைக்கால கூட்டத் தொடரில் பிரதமர் அமெரிக்க பயணம் குறித்தும் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்தும் பதிலளிக்கவேண்டுமென்றும் கூச்சலிடுகின்றன.

இதனால்தான் பிரதமரின் அமெரிக்கப் பயணம் குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்டமை போன்றாகி விட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது!.

o o o




# "ஆஷஸ் கிண்ணம்" யாருக்கு?





"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பது பழமொழி "வல்லவனுக்கு வல்லவன் நானே என்பது புதுமொழி"

வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறதல்லவா.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணியையும் அதன் ரசிகர்களையும் திகைக்க வைக்கும் வகையில் அபார வெற்றிபெற்று தனது பலத்தை நிரூபித்துள்ளது. அவுஸ்திரேலியா.

கிரிக்கெட் உலகில் தனிக்காட்டு ராஜாவாக வலம் வரும் அவுஸ்திரேலியாவைப் பலமான இங்கிலாந்து அணி இம்முறை வீழ்த்தி புதிய வரலாறு படைக்கும் என்ற கருத்துக் கணிப்புக்கள், ஆரூடங்கள் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தினாலும் அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சுக் கூட்டணி தனது அணி பலமான அணி என்பதைத் தொடர்ந்தும் நிருபித்துவிட்டது.



போட்டியின் முதலாவது இன்னிங்சில் 190 ஓட்டங்களுக்கு அவுஸ்திரேலிய அணி வீழ்த்தப்பட்டபோது அது எதிரணியான இங்கிலாந்தை 155 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்தமை அதன் பலத்துக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது. இங்கிலாந்தின் சரிவுக்கு நம்பிக்கை பந்து வீச்சாளர் மெக்ராத் காரணமாக அமைந்தார்.



தொடர்ந்து வெற்றி யாருக்கு என்ற கேள்வியை எழுப்ப இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 384 ஓட்டங்களைப் பெற்று பலமடைய இங்கிலாந்தின் வெற்றியிலக்கு 420 ஓட்டங்களாக மாறியது.

இது இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசைக்கு அச்சுறுத்தலாக அமையாது என்ற கருத்து நிலவினாலும் வெற்றியே தாரக மந்திரமாகக் கொண்ட அவுஸ்திரேலிய அணியிடம் சடுதியாகவே பணிந்தமை அந்நாட்டு ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இரண்டாவது இன்னிங்சிலும் நம்பிக்கை பந்து வீச்சாளர் மெக்ராத் இங்கிலாந்தின் சடுதியான சரிவுக்குக் காரணமானார். குறிப்பாக அவுஸ்திரேலிய பந்துவீச்சு கூட்டணியிடம் இங்கிலாந்து அணி பணிந்தது என்றுதான் சொல்ல வேண்டும். துல்லியமான பந்துவீச்சு மூலம் எதிரணியைத்திணறடிக்கும் மெக்ராத்துக்கு எந்தத் துடுப்பாட்ட வீரரும் பணிந்து விடுகின்றார். இதற்கு மேற்படி போட்டியும் ஒரு சான்றாகும். இதற்காக அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் இராணுவ மரியாதை வழங்குவதாக தெரிவிக்கின்றார்.

தொடர்ந்து எட்டுமுறை ஆஷஸ் கிண்ணத்தை கைப்பற்றியுள்ள அவுஸ்திரேலியா தற்போது முதலாவது போட்டியை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது. இது அதற்கு மகிழ்ச்சியான ஒன்றே.

இந்த நிலையில் பலம், பலவீனம் ஒரு பக்கத்தில் இருக்க, இங்கிலாந்து அணி வீரர்கள் அவுஸ்திரேலியாவின் ஆறு பிடி எடுக்கும் வாய்ப்பை தவறவிட்டமை தமக்குப் பின்னடைவாக அமைந்ததென கவலைப்படுகிறார் மைக்கல் வோர்ன்.


அவுஸ்திரேலியாவைப் பொறுத்து முதல் வெற்றி மூலம் பதற்றத்தை தணித்துள்ளமை எதிர்வரும் போட்டிகளில் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இங்கிலாந்தைப் பொறுத்து கௌரவப் போட்டியாக ஆஷஸ் தொடர் அமைந்துள்ளதால் தவறுகளைத் திருத்தி அடுத்து வரும் போட்டிகளில் சாதிக்க வேண்டிய நிலையை தவிர்க்க முடியாது ஏற்படுத்தியுள்ளது.

அதாவது இங்கிலாந்தின் தற்போதைய அணியால் சாதிக்க முடியாதுவிட்டால் இனிவரும் காலங்களில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்துவது என்பது கடினமானதாகவே இருக்கும். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம் ஆஷஸ் கிண்ணம் யாருக்கு என்று?

# அம்மாவின் பிள்ளை

ஒலிம்பிக் வாய்ப்பு லண்டனுக்குக் கிடைத்ததும் முதல் ஆளாக சந்தோஷப்பட்டவர் ரோஜர் பெடரர் தானாம். அம்மாவுக்கு தொலைபேசியில் "2012 இல் டென்னிஸ் தங்கம் எனக்குத்தான்' என்று அடித்துச் சொல்லியிருக்கிறார். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பச்சை பசேலென்ற புல்தரை களம்.அங்கே பெடரர் என்றால்... கண்ணை மூடிக்கொண்டு அவர்தான் சம்பியன் என்றுசொல்லலாம்.அந்தளவுக்கு விம்பிள்டன் உள்ளிட்ட புல்தரை ஆடுகளத்தில் வீழ்த்த முடியாத மன்னனாகத் திகழ்கிறார்.



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் போட்டிகள் ஆண்டு தோறும் லண்டனில் நடப்பது வழக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாகப் பார்த்தால் சுவிற்சர்லாந்துக் காரரான பெடரர் ஆதிக்கம் தான். 2003, 2004, 2005இல் ஆண்கள் ஒற்றையர் பட்டம் வென்று 'ஹாட் ரிக' சாதனை படைத்தார். தவிர புல்தரை களத்தில் தொடர்ந்து 36 ஆவது வெற்றியைப் பெற்றும் சாதித்தார்.

இப்படி தனது ராசியான லண்டனில் ஒலிம்பிக் போட்டி நடக்கப் போகிறது என்ற செய்தி கேட்டதும் அளவில்லா மகிழ்ச்சி அடைந்துள்ளார் பெடரர். தனது அம்மா லினட்டை தொலைபேசியில் அழைத்துள்ளார்.அம்மா "கற்பனையாவது செய்ய முடிகிறதா? 2012 இல் ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடக்கவுள்ளதாம். அப்படியானால் விம்பிள்டனில் டென்னிஸ் போட்டி நடக்கும். அது ராசியான இடம் என்பதால் எனக்குத்தான் தங்கப் பதக்கம். பெற்ற பிறகு ஓய்வுகூடப் பெற்றுவிடுவேன்" என்று ஆனந்தமாக அம்மாவிடம் கூறியுள்ளார்.

பதக்க நினைப்பில் மகன் பதற்றமாக இருப்பதைப் பார்த்த லினட், 2012 இல் உனது வயதை நினைத்துப் பார்த்தாயா? அந்த வயதில் பதக்கம் வசப்படுமா?" என்று கேள்வி கேட்டு மடக்கியிருக்கிறார். உடனே வயதைக் கணக்குப் பண்ணச் சொல்லியிருக்கிறார். பின்னர் "இப்போது வயது உனக்கு 30 ஆகும். ஆகவே, பதக்க வாய்ப்புநிச்சயம்," என நம்பிக்கை தந்திருக்கிறார் அம்மா.

பின்னர்தான் ஆறுதல் அடைந்தாராம் பெடரர். கடந்த முறை ஏதென்சில் நடந்த ஒலிம்பிக் இரண்டாம் சுற்றில் இவர், செக் குடியரசின் தோமஸ் பெர்டிககிடம் தோற்று வெளியேறினார். 2008 இல் பீஜிங் ஒலிம்பிக்கில் சாதிக்காவிட்டாலும் கூட, 2012 இல் தங்கம் தனக்குத்தான் என்ற கனவில் இருக்கிறார் பெடரர். விம்பிள்டன் ராசி கைகொடுத்ததால் இந்தக் கனவு நிச்சயம் பலிக்கும் என்கிறார்.

# முயன்றால் முன்னேறலாம்

**போரின்** காரணமாக பாதிப்புற்று அனாதரவான நிலையில் இருந்த பல நூற்றுக்கணக்கான தமிழ் சிறுவர்கள் இன்று தமிழீழப் பகுதிகளில் இயங்கி வருகின்ற சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டு பண்படுத்தப்பட்ட மனிதர்களாக வளர்க்கப்படுகின்றார்கள்.

அவர்களது திறமைகள் வெளிக்கொணரப்பட்டு அவர்களது சாதனைகள் தமிழீழம் தாண்டியளவில் பிரபல்யம் பெற்று வருகின்றது.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் புனிதபூமி சிறுவர் இல்ல சிறார்கள் காரத்தே போட்டி நிகழ்வில் பல நாட்டு வீரர்களுடன் மோதி பல முன்னணி இடங்களைப் பெற்று திரும்பியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி கண்டி பேராதனையில் இடம் பெற்ற சிறிலங்கா, இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த காராத்தே வீரர்களுடனான போட்டிகளில் 45-55 கிலோவிற்கு உட்பட்டவர்களுக்கான போட்டிப்பிரிவில் வேலுப்பிள்ளை அருண்குமார் என்னும் புனிதபூமி சிறுவர் இல்ல மாணவன் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

18 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான போட்டிகளில் மகேந்திரன் நிஸாந்தன் எனும் புனிதபூமி இல்ல மாணவன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். அதைவிட மேற்படி பிரிவில் எதிர்வீரசிங்கம் சுஜீபன் எனும் மாணவன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மற்றும் கடந்த வருட இறுதிப்பகுதியில் இடம்பெற்ற ஈழப்பிரியா ஞாபகார்த்த காரத்தே போட்டியில் புனிதபூமி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ம.நிஸாந்தன் (35-40 கிலோ பிரிவு) இரண்டாம் இடத்தினையும், சி. கஜேந்திரன் (30-35 கிலோ பிரிவு) மூன்றாம் இடத்தையும், பு. மதன் (30-35 கிலோ பிரிவு) முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

த. குணசீலன் (40-45 கிலோ பிரிவு) முதலாம் இடத்தையும், எ. ஜெரோம் (35-40 கிலோ பிரிவு) முதலாம் இடத்தையும், மு.நகராஜா (25-30 கிலோ பிரிவு) முதலாம் இடத்தையும் தமதாக்கிக் கொண்டனர். இலைமறைகாயாய் இருந்து வந்த எம் தமிழ் சிறார்களின் சாதனைகள் உலகறிய செய்ய உதவியவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்களே.


துஷ்யந்தன்

# இயமனை வென்ற சாதனையாளர்



பிரான்ஸ் என்றதுமே அங்குள்ள ஈபிள் கோபுரமே நினைவுக்கு வரும். உலக அதிசயங்களில் ஒன்றான அது பிரான்சில் இருப்பதால் பிரான்ஸ் நாடு புகழுடன் விளங்குகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் முதலிடத்தை வகிக்கும் பிரான்ஸ் மேலும் ஒருவிடயத்தில் பெயர் பெற்றுள்ளது. அது பிரான்ஸ் ஓபன் டென்னிஸ் தொடராகும். ஆயினும் அதனையும் மிஞ்சுகின்ற வகையில் அங்கு வருடம் தோறும் துவிச்சக்கர வண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்று வருவது பிரான்சுக்கு மேலும் புகழை ஈட்டுகின்றது.

முதன் முதல் 1903 ஆம் ஆண்டு ஆரம்பமான மேற்படி போட்டி தொடர்ந்து நடைபெற்று அண்மையில் 92 ஆவது போட்டியை அண்மித்துள்ளது. அத்தொடரில் வெற்றி பெற்றதன் மூலம் அமெரிக்காவின லான்ஸ் ஆம்ஸ்ரோங் தொடர்ந்து ஏழுமுறை வென்ற சாதனையைப் பெற்றதுடன் ஆறுமுறை பட்டம் வென்ற பெல்ஜியவீரர் எடி மார்க்சின் சாதனையையும் முறியடித்துள்ளார்.அத்துடன் 1991 முதல் 1995 வரையான ஐந்து போட்டிகளில் தொடர்ந்து சம்பியன் கிண்ணத்தை வென்ற இன்னுமொரு வீரர் ஸ்பெயின் நாட்டின் மிக்கேல் இந்துரேன் என்பவராவார். எனினும் அவரது சாதனையை ஆம்ஸ்ரோங் 2004 இல் முறியடித்துவிட்டார்.இவர்களிருவரையும் விட துவிச்சக்கரவண்டி ஓட்டப் பந்தயத்தில் சாதனை படைத்த மேலும் மூவர் உள்ளனர். ஒருவர் ஜெக்ஸ் அங்க்குயிடில் (1957-1964) மற்றவர் பெல்ஜியத்தைச் சேர்ந்த எடிமார்க்ஸ் (1969-1974) பிரான்சின் பர்னாட் ஹினொல்ட் (1978-1985) ஆகியோராவர்.



இவர்களைவிட பிரான்ஸ் துவிச்சக்கர வண்டிப் போட்டியில் தொடர்ந்து மூன்று முறை சம்பியன் பட்டம் வென்ற ஒருவரும் இருக்கிறார். அவர் லூஷன் பொபாட் ஆவார். ஆயினும் இந்தவரிசையில் முதலிடத்திலிருப்பவர் அமெரிக்காவைச் சேர்ந்த லான்ஸ் ஆம்ஸ்ரோங்கே. ஆயினும் ஆம்ஸ்ரோங் மரணத்தை வென்று வந்தவராகக் கருதப்படுகிறார். காரணம் அவர் சிலகாலம் புற்றுநோய்க்குள்ளாகியிருந்தமையாகும்.

பிரான்ஸ் துவிச்சக்கரவண்டிப் போட்டியில் பிரான்சில் முதலாது பட்டம் வென்றவர் மொறிஸ் ககாரின என்றால் இறுதியாக நடைபெற்ற இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர் ஜெர்மனியின் பான்உல்ரிச் பாசோ என்பவரா? ராஸ்முசேன் என்பவரா? அல்லது தொடர் நாயகன் ஆம்ஸ்ரோங் என்பவரா? என்றிருந்தபோது அது ஆம்ஸ்ரோங் என்று உறுதிப்படுத்திவிட்டார்.

வடிவேல்

# ரணில் சனாதிபதியாக பதவியேற்றால் சுதந்திரக்கட்சி அழிந்து போய்விடும்

## -அமைச்சர் அமரசிறிதொடங்கொட

(கொழும்பு)

சிறிலங்காவின் சனாதிபதியாக ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப் பேற்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அழிந்தேபோய்விடும் என்று சிறிலங்கா பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ள தாவது; சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை அறிவித்தால் அவரைத் தோற்கடிக்க சுதந்திரக் கட்சியில் ஒரு குழுவினர் சதித்திட்டம் தீட்டியுள்ளனர். சனா திபதியாக ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றால் அடுத்த 20 ஆண்டு களுக்கு சுதந்திரக்கட்சியால் ஆட்சி அதிகாரத்தைப் பெறமுடியாது.

மகிந்த ராஜபக்ஷவைத் தோற் கடிக்க திட்டம் தீட்டுகிற சுதந்திரக் கட்சியினர் ஐக்கிய தேசியக்கட்சி அடையப்போகும் பலன்கள் குறித்து சிந்திக்கவில்லை.

பிரதமர் மகிந்தராஜபக்ஷ மீதான ஆழிப்பேரலை நிதி மோசடிக் குற்றச் சாட்டுகளுக்கு சில தொழிலதிபர்கள், ஊடகங்கள் மற்றும் சுதந்திரக் கட்சியில் உள்ளவர்களும் தான் காரணம்.அரசு அதிகாரிகள் செய்த தவறுக்காக மகிந்த ராஜபக்ஷவை குற்றம்சாட்டக் கூடாது. இதேபோன்ற ஒரு நிலையில்தான் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன சனா திபதி பொறுப்பைக் கைப்பற்றினார்.

17 ஆண்டுகளுக்குப் பிறகுதான் சுதந்திரக்கட்சியால் அதிகாரத்துக்கு வரமுடிந்தது. சனாதிபதியாக ரணில் பொறுப்பேற்றால் சிறிலங்கா சுதந் திரக் கட்சி அழிந்தே போய்விடும்.

அநுரா பண்டாரநாயக்கவை சனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்க அறிவிக்க முடி வெடுத் தால் அது மிகவும் தவறான முடி வாக இருக்கும் என்றார் அவர்.

முன்னதாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட, ஆழிப்பேரலை மோசடி வழக்கிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விடுபடுவதற்காக தேங்காய்களை உடைத்து வேண்டுதல் செய்தார்.

# உக்கும் பிளாஸ்ரிக் பொருட்களை தயாரிக்க புதிய சட்டம்

(கொழும்பு)

உக்கிப் போகும் வகையில் பொலித்தீன், பிள்ாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனப் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகச் சுற்றாடல் துறை அமைச்சர் தெரிவித்தார். புதிய சட்டத்திற்கேற்ப பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்படும் போது அவை உக்கிப் போவதற்கான இரசாயனப் பொருட்கள் கலக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார். புதிய இரசாயனப் பொருட்கள் கலக்கப்படும் பொருட்கள் மூன்று மாதங்களுக்குள் உக்கிப் போய்விடும் என்றும், இதன் மூலம் சுற்றாடல் பாதிப்பைப் பெருமளவு குறைக்கலாம் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# பாலியல் வல்லுறவு வழக்கில் பௌத்த பிக்கு தேடப்படுகின்றார்!

பாலியல் வல்லுறவு முறைப்பாடு சம்பந்தமாக ஜோதிடம் கூறிவந்த பிரபல பௌத்த பிக்குஒருவரை சிறிலங்காப்பொலிசார் தேடி வருகின்றனர். 18 வயது இளம் பெண்ணுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி தனது விருந்தினர் மாளிகையில் வைத்து வல்லுறவுகொண்டதாக சப்ரகமுவமாகாணத்தைச் சேர்ந்த ஜோதிடம் கூறும் பிக்கு ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. புலத்கோப்பிட்டிய பொலிஸ் பொறுப்பதிகாரி குணவர்த்தன இது குறித்து கூறுகையில், பாதிக்கப்பட்ட பெண்ணும்,அவரது தாயாரும் பௌத்த பிக்குவை சந்திக்கச் சென்று ள்ளனர். அப்போது இளம் பெண்ணை மிரட்டி பாலியல் வல்லுறவு கொண்டதாக தெரிகிறது என்றார். சிங்கள நடிகைகளுடனும் முறையற்ற பாலுறவு வைத்திருந்தாகவும் பல இளம்பெண்களை அவர் சீரழித்திருப்பதாகவும் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக ஹட்டனில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஹட்டன் நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஹட்டன் வெலிஓய மேற்பிரிவைச்சேர்ந்த அர்ச்சுனன் லோகநாதன் என்ற சிறுவன் கொழும்பில் வேலைக்கு அமர்த்தப் பட்டிருந்த போது மரணமானதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம் நடத்தியது.

இதில் பெருமளவான சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் பங்கேற்றனர்.இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த மனித அபிவிருத்தி ஸ்தாபன தலைவர் பி.பி சிவபிரகாசம் கருத்துரைக்கையில்;மலையக தமிழ் சிறுவர்கள் கல்வியைத் துறந்து வீட்டுப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் நிலை மாறவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார். (32)

# பிரதமருக்கு எதிரான விசாரணைகளை சுயாதீனமாக மேற்கொள்ள வேண்டுகோள்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதியை மோசடி செய்ததான சிறிலங்காப் பிரதமர் மீதான விசாரணைகள் சுதந்திரமாக நடைபெறவேண்டும் என்று சிறிலங்கா சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண நிதியில் ஒரு பகுதியை ஹெலப் ஹம்பாந் தோட்ட எனும் தனியார் கணக்கில் சிறிலங்கா பிரதமர்மகிந்தராஜபக்ஷ வைப்பீடுசெய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாடு தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி சட்டமா அதிபரிடம் இரகசிய பிரிவுப் பொலிசார் ஆலோசனை நடத்தினர்.

அப்போது சுதந்திரமான விசார ணைகளை இரகசிய பிரிவினர் நடத்தவேண்டும் என்றும் பிரதமர் மகிந்தராஜபக்ஷவிற்கு நெருக்கமான சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருக்கும் சொலிஸிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வாவை இந்த விசார ணைகளில் இணைத்துக்கொள்ள வேண்டாம் என்றும் சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

# சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றுகிறது

## ~ஜீ.எல். பீரிஸ்கண்டனம்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல்தொர்பாக அர சாங்கம் இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சாட்டினார். கொழும்பு தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கி யுள்ள பிரத்தியேகப் பேட்டி யொன் றிலேயே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

வோஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச சனநாயக வாதிகளின் மாநாட்டில் இலங்கை சனாதிபதித் தேர்தல் தொடர்பாக நிறைவேற்றப் பட்ட யோசனை தொடர்பில் பொதுசன ஐக்கிய முன்னணி கடந்த சனிககிழமை விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் கருத்துரைக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் முரண்பாடுகளைக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

வோசிங்டனில் நடைபெற்ற சர்வதேச சனநாயக வாதிகளின் மாநாட்டில் சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெற வேண்டுமென்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டமையை பொது சன முன்னணி அந்த அறிக்கையில் எதிர்த்திருந்தது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஒரு நாட்டின் பிரச்சி னைகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் கருத்து வெளியிடுவது இயல்பென்றும் கூறினார்.

ஆனால், சர்வதேச நாடுகள் தங்க ளுக்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவிக்கும்போது ஏற்றுக்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம், எதிராக கருத்து வெளியிட்டால் அதனை ஏற்றுக் கொள்வதில்லையெனவும் கூறியுள்ளார். இவ்வாறான நிலைப்பாடே இரட்டைநிலைப்பாடெ னவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# மேர்வின் சில்வாவின் மகனை கைது செய்ய பொலிசார் நடவடிக்கை

(கொழும்பு)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை பிரதி அமைச்ர் மேவின் சில்வாவின் மகனைக் கைது செய்வது தொடர்பாக பொலிசார் ஆராய்ந்து வருவதாக போதை வஸ்து தடுப்புப்பிரிவின் இயக் குநர் ஆனந்த ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பிரதி அமைச்சரின் மக னும், அவரது பாதுகாப்புப் பிரிவினரும கடந்த சனிக்கிழமை ஐந்து நட்சத்திர விருந்தகம் ஒன்றில் போதை வஸ் துக்களை விநியோகித்துக் கொண் டிருக்கையில் போதை வஸ்துத் தடுப்புப் பிரிவினர் அங்கு சென்று ள்ளனர். இதன் போது குறித்த போதை வஸ்து தடுப்புப் பிரிவினரை பிரதி அமைச்சரின் மகனும், அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினரும் தாக்கி யதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலேயே பிரதி அமைச்சரின் மகனை கைது செய்ய ஆராய்ந்து வருவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பிரதி அமைச் சரின் மகன் விநியோகித்த போதை வஸ்தானது ஹெரோயினை விட பன் மடங்கு அபாயகரமானது எனப் பொலி சார் தெரிவித்துள்ளனர். (32)

# மூவரின் தூக்குத் தண்டனையை நீக்க சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

சவுதிநாட்டில் குற் செயல்களில் ஈடுபட்ட மூன்று சிங்கள ரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யவேண்டும் என்று சவுதி மன்னருக்கு சர்வ தேச மன்னிப்புச் சபை ோரிக்கைவிடுத்துள்ளது.

வழிப்பறி மற்றும் பொ க்களை அச்சுறுத்தியதான வழக்குகளில் சிறிலங் காவைச்சேர்ந்த டி.டி.ரஞ்சித் சில்வா, ஈ.ஜே. விக்டர் கொறியா,சனத் புஸ்பகுமார ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இம் மரண தண்டனைக்குப் பதிலாக வேறு தண்டனை அளிக்குமாறு லண்டனைச் சேர்ந்த அந்த அமைப்பு, சவுதி மன்னருக்கு அனுப்பியுள்ள வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளது. சவுதி அரேபியாவில் இந்த ஆண்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 55 பேரில் மூன்றில் இரண்டு பங்கினர் வெளிநாட்டவர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# சீனா,ரஷ்யாவிடமிருந்து வானூர்திகள் சிறிலங்கா விமானப்படைக்கு கொள்வனவு

சீனாமற்றும் ரஷ்யாவிடமிருந்து விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் சிறிலங்கா அரசு கொள்வனவு செய்கிறது.

ரஷ்யாவிடமிருந்து 2 எம்.ஐ-26ரக உல்கங்குவானூர்திகளை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்யவுள்ளது. 20 தொன் எடையுள்ள இந்த உலங்கு வானூர்திகள் பலாலி விமானத் தளத்தில் பயன்படுத்தப்பட உள்ளன.

தற்போதைய உலங்குவானூர் தியின் செயற்திறனை விட கூடுதல் திறன் பெற்றதாக இது இருக்கும்.

பலாலி விமானத் தளத்துக்கான விநியோகத்தைச் சீரமைக்கும் நோக்கத்திலேயே இந்தக் கொள்வனவு நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ளதாக ச ட்டாலும் தற்போதைய போர்ச் ூழலில் இது முக்கியத்துவம் வா ந்ததாகக் படுகிறது.

நிறுத்த ஒப்பர் ம கண்டி ஏ-9 நெடுஞ்சாலை மூலம் விநியோ கங்களை மேற்கொள்ள முடியும் என்ற போதும் விமான மார்க்கத் தையே பயன்படுத்த சிறிலங்கா இராணுவம் முடிவுசெய்துள்ளது.

அண்மையில் சீனாவிடமிருந்து மூன்று மிக நவீன கே-8 பயிற்சி விமானங்களையும் சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய் திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்புக்கு நிதியளிப்பது குறித்து கனேடிய அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புக்கு நிதியளிப்பது தொடர்பான நடைமுறைகளை கனேடிய அரசு ஆராய்ந்து வருகிறது.

சிறிலங்காவுக்கான கனேடியத் தூதரக அதிகாரி கிறிஸ்டினா ப்ரிடொன் டெய்ன் இதைத் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிறி லங்கா தலைமை நீதிமன்றம் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ள போதி லும், கனேடிய அரசு தனது நிலையை மற்றிக்கொள்ளாது என்றும் பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவு அளிப்பது என்ற நடைமுறை வேறு, நிதியளிப்பது என்ற நடைமுறை வேறு. ஆகவே அது குறித்த ஆலோசனை நடத்தி வருகின்றோம் என்றும் அவர் கூறினார். பொதுக்கட்டமைப்பைச் செயற் படுத்துவதன் மூலம் முடங்கிக்கிடக்கும் அமைதிப் பேச்சுக்கள் மீள நடைபெறக்கூடும் எ நம்புவதாகவும் கனேடிய தூதரக அதிகாரி கூறினார்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பாதாளக் குழுத் தலைவர் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் ஐந்து நீதிமன்றங்களினால் பிடியாணை பிறிப்பிக்கப் பட்டிருந்த பாதாளக்குழுத்தலைவரான நேவ்ருவான் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பிரதேசத்திலுள்ள வீட்டில் அவர் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்ட நேவ் ருவான் கொலை, கொள்ளை உட்பட 15இற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர். இவரைக் கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஐந்து நீதிமன்றங்கள் பிடியாணை பிறப் பித்திருந்தன.

யாழ்ப்பாணம்

# அனைத்துத் தொகுதிகளையும் சுற்றிவந்து
# ஜெயலலிதாவின் அராஜகத்தை அம்பலப்படுத்துவேன்
## விருது நகரில் வை.கோ பேச்சு

அனைத்துத் தொகுதிகளையும் சுற்றி வந்து சட்டமன்ற தேர்தலில் ஜெயலலிதாவின் அராஜகங்களை அம்பலப்படுத்துவேன் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ தெரிவித்தார்.

விருது நகர் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

இந்த விருதுநகர் தொகுதியில் என்னை இரு முறை தேர்ந்தெடுத்தீர்கள். ஒரு கட்சியின் பிரதிநிதியாக இல்லாமல் சாதி மத எல்லையைக் கடந்து அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதியாகச்செயற்பட்டு மஞ்சள்காமாலை முகாம், உடல் ஊனமுற்றோர் நலவாழ்வு முகாம் எனஇரு முகாம்களை கட்சிக்கொடி கட்டாமல் நடத்திக்காட்டினேன். இந்தியாவில் 65 ஆயிரம் குழந்தைகளுக்கு மஞ்சள்காமாலை தடுப்பூசி போடப்பட்டது. இந்த மாவட்டத்தில் தான் ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தினை செயற்படுத்தியபோது அனைத்துக் கட்சியினருக்கும் கடிதம் எழுதி செயற்படுத்தினேன்.

12 இலட்சம் வாக்காளர்களின் பிரதிநிதியாக இருந்த என்னை 19 மாதங்கள் சிறையில் அடைத்து நிர்மூலம் ஆக்கிவிடவேண்டுமென செயற்பட்டார் ஜெயலலிதா. அதை மறந்துவிட முடியாது. தமிழகத்தை பாழ்படுத்த செயற்பட்ட ஜெயலலிதாவைச் சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்.

அக்கிரம செயல்களைச் செய்து வரும் ஜெயலலிதா கூட்டத்தின் கொட்டத்தை அடக்க கலைஞர் தலைமையிலான கூட்டணியின் வெற்றிக்கு பாடுபடவேண்டும்.

ஜெயலலிதாவால் நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் போல்அரசு ஊழியர்கள், சாலைப்பணியாளர்கள் என அனைத்து தரப்பினருக்கும் கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது அறிவித்து வரும் அறிவிப்புக்கள் மூலம் மக்களை ஏமாற்றுவதற்காக நாடகமாடி செயற்படுத்தி வருகிறார். சட்டமன்ற தேர்தலில் அனைத்துத் தொகுதியிலும் சுற்றி வந்து ஜெயலலிதாவின் அராஜகங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லி அம்பலப்படுத்துவேன்.

உங்களை வைத்துத்தான் நான், நீங்கள்தான் எனது குடும்பம்.12 ஆண்டுகால ம.தி.மு.க.வின் பயணத்தில் உங்களது வியர்வை சிந்தி உள்ளது. நம்மால் ஆன கடமையை தமிழகத்திற்குச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார் வை.கோ.

# ஆந்திராவில் பலத்த மழை; 10 பேர் பலியாகினர்

ஆந்திர மாநிலத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக பத்துப்பேர் பலியாகியுள்ளனர்.வங்காள விரிகுடா கடலில் குறைந்த காற்றழுத்த மண்டலம் காரணமாக ஆந்திர மாநில கடற்கரைப் பகுதி மற்றும் தெலுங்கானா பகுதியில் பலத்தமழை பெய்து வருகிறது. இதனால் அந்தப் பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழையும், ஆந்திர மாநிலத்தில் தீவிரமடைந்துள்ளது. வாரங்கல், அடிலாபாத், கிருஸ்ணா, கர்னூல் மாவட்டங்களில் கடும்மழை பெய்து வருகிறது.



பழைய டில்லிப்பகுதி வீதியோரத்தில் நேற்று முன்தினம் ஒரு சிறுமி வருவாய்க்காகக் கயிறு மேல் நடந்து சாகசம் நிகழ்த்திய காட்சி.



நிலநடுக்கம் காரணமாக [illegible] பூங்கா நகர் மக்கள் வீதி ஓரத்தில் நித்திரை செய்த காட்சி.

# சென்னையை அதிரவைத்த நில அதிர்வு
# மக்கள் பதறியடித்து வீதிகளுக்கு ஓட்டம்

சென்னையில் நேற்று முன்தினம் இரவு லேசான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதையடுத்து பொதுமக்கள் வீடுகளை விட்டு பீதியுடன் வெளியேறினார்கள்.

நேற்று முன்தினம் இரவு 9.12 மணிக்கு லேசான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த அதிர்வை அடுத்து பொதுமக்கள் அனைவரும் வீடுகளை விட்டு பீதியுடன் ஓடினர். பல்வேறு பகுதிகளிலும் இந்தநில அதிர்வு உணரப்பட்டது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி படுக்கையில் இருந்து கீழே விழுந்தார். அங்கிருந்த நோயாளிகள் தொட்டிலில் தாலாட்டியதைப்போல இந்த நில அதிர்வை உணர்ந்தனர்.

அரசு பொது மருத்துவமனையில் அடுக்குமாடி கட்டடத்தில் இருந்த நோயாளிகள், பொதுமக்கள் அலறி அடித்துக்கொண்டு கீழே ஓடினர். அடுக்குமாடி குடியிருப்புக்களில் குடியிருந்த மக்கள் இந்த லேசான அதிர்வை உணர்ந்து கீழே இறங்கிச் சென்றனர். அவர்கள் நீண்ட நேரமாக வீட்டுக்குள் செல்வதற்கு அச்சப்பட்டு வெளியே இருந்தனர். வீடுகள் லேசாகக் குலுங்கியது. நகரில் எங்கும் பாதிப்பு இல்லை.

இதற்கு முன்பெல்லாம் இது போன்ற நில அதிர்வு, நில நடுக்கம் ஏற்பட்டால் மக்கள் திறந்த வெளிப் பகுதிக்கு செல்லவேண்டும் என அறிவுறுத்தப்படுவார்கள். மக்களும் சென்னை மெரினா கடற்கரைக்கு சென்றுவிடுவார்கள். கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியைத் தொடர்ந்து கடற்கரைக்குச் செல்ல மக்கள் பயந்து போய் உள்ளனர். இதனால் நேற்று முன் தினம் கடற்கரைக்கு ஒருசில மக்களே சென்றனர்.

# பிரதமர் மன்மோகன்சிங் மீது
# கண்டனத் தீர்மானத்திற்கு ஏற்பாடு

(புதுடில்லி)

ஆங்கிலேயர் ஆட்சியைப் புகழ்ந்து பேசிய பிரதமர் மன்மோகன்சிங் அரசு மீது பாராளுமன்றத்தில் கண்டன தீர்மானம் கொண்டு வர தே.ஜ.கூட்டணி கட்சிகள் முடிவு எடுத்துள்ளன.

தே.ஜ.கூட்டணி கட்சி தலைவர்களின் கூட்டம்முன்னாள் பிரதமர் வாஜ்பாய் வீட்டில் அவரது தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.

தே.ஜ.கூட்டணி அமைப்பாளர் ஜோர்ஜ்பெர்னாண்டஸ், பா.ஜ.க. தலைவர் அத்வானி, சுஷ்மா வராஜ், ஜஸ்வந்சிங் விஜயகுமார், [illegible] (பா.ஜ.க.), திக்விஜய்சிங் (ஐக்கிய ஜனதாதளம்) மற்றும் அகாலி தள தலைவர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை விளக்கி பா.ஜ.க. பொதுச்செயலாளர் சுவராஜ் பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது;

சமீபத்தில் இங்கிலாந்து சென்ற பிரதமர்மன்மோகன்சிங் ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் பேசும்போது இந்தியாவில் ஆங்கிலேயர் நடத்திய ஆட்சி நல்லாட்சி என்று புகழ்ந்துள்ளார். இது இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு செய்யப்படும் துரோகம் ஆகும்.

இதற்காக பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரில் பிரதமர் மன்மோகன்சிங் அரசு மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவர தே.ஜ.கூட் கட்சிகள் முடிவுசெய்துள்ளன.

இந்தக் கண்டனத் தீர்மானம் மக்களவையில் 184ஆவது விதியின் கீழும் மாநிலங்களவையில் 167-ஆவது விதியின் கீழும் கொண்டு வரப்படும் விவாதத்திக்குப் பிறகு அந்தத்தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடக்கும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சிறுபான்மை இனத்தினரை திருப்தி செய்யாக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. கடந்த 14 மாதங்களாக காங்கிரஸ் அதன் தோழமை கட்சிகளின் செயற்பாடுகள் நாட்டில் பிரிவினை வாதத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளன. இந்துக்களை இழிவு படுத்தும் வகையில் இருக்கின்றன.

இது தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இந்தியாவில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

கிழக்கு இந்தியாவை வங்களா தேசமாக மாற்ற முயற்சி நடந்தால் அதைத்தடுக்க பெரிய மக்கள் போராட்டத்தை தே.ஜ.கூட்டணி நடத்தும் என்று அவர் கூறினார்.



பாராளுமன்றத்தைச் சுமுகமாக நடத்துவது தொடர்பாக மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி நேற்று முன்தினம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார். இதில் கலந்துகொண்ட தலைவர்களைப் படத்தில் காணலாம்.

## உத்தரப் பிரதேசத்தில் பலத்த மழை; 63 கிராமங்கள் பாதிப்பு

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடந்த இரண்டு வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாநிலத்திலுள்ள பெரிய நதிகளான யமுனை, கங்கை நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஜார்கா நதி ஓடும் பாஸ்தி, பகுதியில் 55 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. யமுனை நதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் கோரம்பூர் மாவட் டத்தில் எட்டுக் கிராமங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.



சென்னை பட்டினப்பாக்கம் கடற்கரையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட இராட்சத அலைகளால், கடலில் நங்கூரம் இட்டிருந்த படகுகள் கரையோரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

# தாக்கிய பாகனை அடித்துக் கொன்ற யானை

(நெல்லை)

மூலக் கரைப்பட்டியில் குடிபோதையில் யானையை அடித்ததால் ஆத்திரம் அடைந்த யானை பாகனை தனது துதிக்கையால் அடித்துக் கொன்றுள்ளது.

நேற்று முன்தினம் பாகனும் மேலும் மூன்று பேரும் நாங்கு நேரி அருகே சிறுங்கேரி கோவில் திருவிழாவுக்கு தங்களது யானையை அழைத்துச் சென்றனர். மூலக்கரைப்பட்டி வீதியில் சென்று கொண்டிருந்த போது அங்குள்ள கடைகளில் நிதி திரட்டியுள்ளனர். அப்போது யானைப் பாகன் குடிபோதையில் இருந்துள்ளார். அவர் யானையை கம்பால் அடித்து துன்புறுத்தியுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த யானை திடீரென அவரைத் துதிக்கையால் தூக்கி தொலைபேசி கம்பத்துடன் வைத்து நசுக்கியது. இதைப் பார்த்ததும் அங்கு நின்று கொண்டிருந்த மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். யானையின் தாக்குதலில் பலத்த காயம் அடைந்த அவரை சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் மரணமானார்.

# சுழலில் சுருண்டது மேற்கிந்தியத் தீவு

# தொடரைக் கைப்பற்றியது சிறிலங்கா



சிறிலங்கா - மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் 240 ஓட்டங்களால் சிறிலங்கா அணி வெற்றி பெற்றுள்ளது.

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நான்காம் நாளான நேற்றுஎட்டுவிக்கெட் இழப்பிற்கு 375 ஓட்டங்களை பெற்ற போது சிறிலங்கா அணி ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சங்கக்கார ஆட்டமிழக்காது 157 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் மேற்கிந்தியத் தீவு அணிக்கு வெற்றியிலக்காக 378 ஓட்டம் நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ந்து வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்தியத்தீவு முரளிதரனின் சுழலில் சுருண்டு போனது என்றுதான் சொல்ல வேண்டும். இறுதியில் 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. டினோறின் அதிகபட்சமாக 29 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் முரளிதரன் 46 ஓட்டங்களை கொடுத்து எட்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன் மூலம் ஒரு இனிங்சில் 46 தடவைகள் ஐந்து விக்கெட்டுக்களையும் 14 தடவைகள் பத்து விக்கெட்டுக்களையும் கைப்பற்றியவர் என்ற பெருமையை பெற்றார்.

போட்டியின் நாயகனாக சங்கக்காரவும், தொடர் ஆட்ட நாயகனாக சமிந்தவாசும் தெரிவாகினர்.

மேற்படி வெற்றி மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற நிலையில் சிறிலங்கா கைப்பற்றியது.




## எஞ்சியுள்ள போட்டிகளிலும் தமது அணி ஆதிக்கம் செலுத்தும்



– மெக்ராத்

நேற்று முன்தினம் முடிவடைந்த ஆஷஸ் தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டியை வென்ற பின்னர் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் மெக்ராத் தமது அணி எஞ்சியுள்ள போட்டிகளிலும் ஆதிக்கம் செலுத்தும் என தெரிவித்துள்ளார். எனினும் இங்கிலாந்து அணியிலும் திறமான வீரர்கள் இருக்கிறார்கள் என்றும், குறிப்பாக ஸ்ரிவ் ஹார்மிசனை அவர் பெரிதும் பாராட்டியுள்ளார். அத்துடன் இளம் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்ததாகவும் குறிப்பிட்ட அவர் இவ்விருவரையும் சமாளிப்பது தமது அணிவீரர்களின் திறமையிலேயே தங்கியிருப்பதாகவும் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

## முதலாவது டெஸ்ட் போட்டி தோல்வி வீரர்கள் மீது குறை கூறுகிறார் வோகன்



ஆஷஸ்கிண்ண முதல் டெஸ்ட் போட்டியில் 239 ஓட்டங்களால் தோல்வியடைந்த மைக்குஇங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் தனது வீரர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியதாகவும் பிடிகளை தவறவிட்டதாகவும் குறை கூறியுள்ளார். அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் சிறப்பாக ஆடிய நிலையில் தனது அணியில் பீற்றர்சனைத் தவிர யாரும் துடுப்பாட்டத்தில் நிலைத்து நிற்கவில்லை என அவர் மேலும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இன்னிங்சில் 100 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்தபோதும் அவுஸ்திரேலிய அணி தப்பித்துக் கொண்டதாக தெரிவித்துள்ள வோகன்,ஆறு பிடிகளை தமது களத்தடுப்பு வீரர்கள் தவறவிட்டமையால் 384 ஓட்டங்கள் வரை அதிகரித்து விட்டதாக கூறினார். எனினும் கெவின் பீற்றர்சன் இரு இன்னிங்சிலும் அரைச்சதங்களைப் பெற்றமை தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக குறிப்பிட்ட அவர் ஆடிய நான்கு நாட்களிலும் சூழல், ஆட்டத்தின் தீவிரம், அழுத்தம் என்பவை தன்னைக் கவர்ந்ததாக தெரிவித்தார்.

## தசைப்பிடிப்பால் சமிந்தவாஸ் அவதி ஒருநாள் போட்டியில் பங்கேற்பது சந்தேகம்



தசைப் பிடிப்பு காரணமாக இந்தியாவுக்கு எதிரான முதல் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வீரர் சமிந்தவாஸ் ஆடுவது சந்தேகம் என்று இலங்கை அணியின் உடல்கூற்று நிபுணர் கூறியுள்ளார்.

இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான சமிந்த வாஸ் நேற்று முன்தினம் துடுப்பாட்டம்செய்த போது தசைப் பிடிப்புக்காரணமாக பெரிதும் அவதிப்பட்டார். இதனால் துடுப்பாட்டம் செய்தபோது மாற்று ஆட்டக்கரர் உதவியுடன் ஆடினார். இந்நிலையில் மூன்று நாடுகள் போட்டியின் முதல் ஆட்டத்தில் வாஸ ஆடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. முதல் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் வரும் 30ஆம் திகதி நடக்கிறது.

இந்நிலையில் வாஸின் காயம் குறித்து இலங்கை அணியின் உடல்கூற்று நிபுணர் சி.ஜே.கிளார்க் கூறுகையில், "வாஸ் தசைப் பிடிப்பினால் அவதிப்பட்டுவருகிறார். அவருக்கு ஏழு முதல் பத்து நாட்கள் ஓய்வு தேவை. எனவே அவர் இந்தியாவுக்கு எதிரான முதல்ஆட்டத்தில் ஆடுவது சந்தேகம்தான்" என்றார்.

## பிரான்ஸ் துவிச்சக்கரவண்டிப் போட்டி; லான்ஸ் ஆம்ஸ்ரோங் சாதனை



பிரான்சில் நடைபெற்ற டுவர்டி பிரான்ஸ் துவிச்சக்கர வண்டி ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்க வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் வெற்றி பெற்று வரலாற்றில் தொடர்ந்து ஏழாவது முறை வெற்றிபெற்ற சாதனையை எட்டியுள்ளார். இதன் மூலம் அவர் பெல்ஜியத்தின் முன்னாள் வீரர் எடிமெர்க்ஸின் சாதனையை முறியடித்தார். ஆம்ஸ்ரோங் 1999 ஆம் ஆண்டுபோட்டியில் வென்ற பின்னர் மூன்று வருடங்கள் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். இவர் இரண்டு வயதாக இருந்த போது தாயையும் இவரையும் தந்தையார் விட்டுப் பிரிந்ததால் திருமணமாகும் வரை தாயின் அரவணைப்பிலேயே இவர் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## கரைச்சி பிரதேச மெய்வன்மைப்போட்டி நாளைய போட்டி நாளை மறுதினம்

கரைச்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளஅதே வேளை நாளைய போட்டிகள் நாளைமறுதினத்துக்கு (வியாழக்கிழமை) மாற்றப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவநேசன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் கால்பந்து போட்டியும் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேற்படி போட்டிகள் கிளி மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆஷஸ்கிண்ண முதலாவது டெஸ்ட்போட்டியை வென்ற மகிழ்ச்சியை கொண்டாடும் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் தனது இரு பிள்ளைகளுடனும் காணப்படுகிறார்.



## முன்பள்ளி விளையாட்டு விழா

மணற்குடியிருப்பு, கோவில் குடியிருப்பு, தற்காலிக குடியிருப்பின் முன்பள்ளிகளின் விளையாட்டு விழா கடந்த 20ஆம் திகதி முல்லை பிரதேச நிலையத்தலைவர் தே.சுரேஸ் தலைமையில் ஆரம்பமானது.

மங்கலவிளக்கினை கோவில்குடியிருப்பு க.தொ.கூ.ச.தலைவர் க.மணிமாறன், JRS நிறுவன இணைப்பாளர் அமலன் ஆகியோர் ஏற்றினார்கள் தமிழீழத் தேசியக்கொடியினை மாவீரரின் தந்தையார் ஏற்றினார். த.பு.க.கொடியினை மு.ம.ந.சங்க இணைப்பாளர் க. பாலசுப்பிரமணியம்ஏற்றினார். சிறப்பாக மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வுகள் இடம் பெற்றன. (20)

## வெலிக்கடை சிறை படுகொலை நினைவாக வருடாந்த கால்பந்து சுற்றுப் போட்டி


1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச்சிறையில் சிங்களப் பேரினவாதிகளால் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்ட தாமுகந்தையா உட்பட புத்தூர் கிழக்கு மாவீரர்களின் ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத் துறையாழ் உதைபந்தாட்ட லீக் ஆதரவில் புத்தூர் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன:

நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில் 3.30 மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும்அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதின. ஆரம்ப முதலே விறுவிறுப்பாக நடை பெற்ற ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் பெறுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் கோல் பெறும்வாய்ப்பை இழந்தனர். இந்நிலையில் பாதி ஆட்டம் முடிவுக்குவர இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியது இருஅணி வீரர்களும் விறுவிறுப்பாக ஆடிய போதிலும் கோல்எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைய வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக "பெனால்டி" உதை வழங்கப்பட்டது இதில் வீனஸ் விளையாட்டுக்கழகம் 3-1என்ற கோல் கணக்கில் அச்செழு வளர்மதி கழகம் வெற்றி பெற்றது.

இதேவேளை 4.30 மணிக்கு ஆரம்பமான ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழகமும் கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதின. இந்த ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் கோல்கள் எதனையும் பெறமுடியாது போக முதல் பாதி ஆட்டம் முடிவுக்குவர இரண்டாம்பாதி ஆட்டம் தொடங்கியதும் மிகவும் உத்வேகத்துன் இரு அணி வீரர்களும் கோல் பெறுபதற்கு பலமுறைமுயற்சித்த போதிலும் கோல் பெறும் வாய்ப்பை பெறமுடியாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது, வெற்றியை நிர்ணயிப்பதற்காக உடைப்பு உதை (பெனால்டி) வழங்கப்பட்டது இதில் எவறெஸ்ற் விளையட்டுக்கழகத்தை தொண்டமானாறு கலைவாணி வியைாட்டுக்கழகம் 3-2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி






தமிழீழ விளையாட்டுதுறையினரும் மாட்டு வண்டிச் சவாரி சங்கத்தினரும் இணைந்து நடாத்திய மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நேற்று வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடைபெற்றது.

நான்கு பிரிவுகளாக நடைபெற்ற மேற்படி போட்டியில் ஈ.பிரிவில் முதலாம் இடத்தை பிரமந்தனாற்றைச் சேர்ந்த மு.செந்தில்குமார், இ.பிரிவில் முதலாம் இடத்தை வட்டக்கச்சியை சேர்ந்த ச. கிறிஸ்ரிகெனடி ஆ. பிரிவில் முதலாம் இடத்தை வட்டக்கச்சியை சேர்ந்த குகன் அ.பிரிவில் முதலாம் இடத்தையும் பூநகரியை சேர்ந்த மு.செந்தில்குமார் ஆகியோரின் காளைச் சோடிகள் வெற்றிபெற்று பரிசில்களை தட்டிச் சென்றன.

இப்போட்டிக்கு தமிழீழத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்து 50 இற்கு மேற்பட்ட காளைச் சோடிகள் பங்கு பற்றின.

அடுத்த சவாரிப்போட்டி எதிர்வரும் 31 ஆம்திகதி பூநகரியிலும், அடுத்தமாதம் எழாம் திகதி விசுவமடுவிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



## சிந்தனைக்கு

விடுதலைப்புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப்புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள் தான் மக்கள்; மக்கள்தான் புலிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26.07.2005

தொலைபேசி } 060-2213244
தொலைநகல் } 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசியல்யாப்பில் உடனடி திருத்தம் தேவை

## சிறிலங்கா மக்கள் கட்சி பொதுச் செயலாளர்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் யாப்பில் உடனடித் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என சிறிலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் நவரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிராமல் குறிப்பிட்ட வட்டத்திற்குள் கொண்டிருப்பதனால் இந்தப் பிரச்சினைகளுக்கு குறைந்த பட்ச தீர்வேனும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் கட்சியின் ஆறாவது தேசிய பிரதிநிதிகள் சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நாட்டிற்கு புதிய அரசியலமைப்பொன்று தேவை என்பதை வலியுறுத்துவதாக குறிப்பிட்ட அவர், புதிய அரசியலமைப்பில் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். வடக்கு, தெற்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த அரசியலமைப்பின் மூலம் நியாயமான நிலையொன்றை தோற்றுவிக்க வேண்டும் எனவும் ரஞ்சித் நவரத்ன குறிப்பிட்டார். (32)

# கடற்படைத் தளபதி பதவியிலிருந்து வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஓய்வு

## – புதிய தளபதியாக மொஹான் விஜேவிக்கிரம?

(கொழும்பு)

கடற்படை தளபதி பதவியிலிருந்து இம்மாத முடிவுடன் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையில் அவர் தொடர்ந்து கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதி பதவியில் இருப்பாரா? என்பது குறித்தும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.கடந்த வெள்ளிக் கிழமை பிராந்திய கடற்படை தளபதிகள் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளுடன் கடற்படை தலைமையகத்தில் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சந்திப்பொன்றை நடத்தினார்.

இதுவே தான் கடற்படைத் தளபதி பதவியிலிருந்து நடாத்தும் இறுதியான மாநாடு என்றும் 31ஆம் திகதிக்கு பின்னர் புதியதொரு கடற்படைத் தளபதி தனது இடத்திற்கு நியமிக்கப்படுவாரென்றும் இங்கு உரையாற்றிய போது தயா சந்தகிரி தெரிவித்துள்ளார்.

அடுத்த கடற்படை தளபதி யார்? என்பது குறித்து அவர் எதுவும் கூறவில்லை. எனினும் தற்போதய கடற்படை தலைமை அதிகாரியான றியல் அட்மிரல் மொஹான் விஜேவிக் கிரமவே இந்த பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் தலைமை அதிகாரியாக றியல் அட்மிரல் வசந்த கரண்ணகொட நியமிக்கப்படுவார் என்றும் தெரியவருகிறது.

கடற்படை தளபதி பதவியிலிருந்து வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஓய்வு பெற்றாலும் கூட்டுப்படை பதவியில் இவர் தொடர்வாரா? என்பது குறித்து இன்னமும் தெளிவான தகவல் ஏதும் வெளியாகவில்லை என்பதுடன் இந்த தகவல்கள் குறித்த உத்தியோகபூர்வமான வெளியீடுகள் மேற்கொள்ளப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (32)

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு 3 மாற்று யோசனைகள்

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம்களுக்கு மூன்று மாற்று யோசனைகளை முன்வைக்க தீர்மானித்திருப்பதாக அரசாங்க சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நிவாரண சபையை சமப்படுத்தும் வகையில் அதில் பங்கேற்று செயற்படுமாறு அரசாங்கம் முஸ்லிம் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் முஸ்லிம்களுக்காக பிறிதொரு உடன்படிக்கையில் கைச்சாத்திட அரசாங்கம் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அரசாங்க சமாதான செயலகம் கூறியுள்ளது.

இவ்விரு யோசனைகளையும் ஏற்றுக் கொள்ள முடியாதுவிடில் புதிய ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையொன்றிற்கு பதிலாக திருத்தங்களுடன் கூடிய உடன்படிக்கையொன்றில் .கைச்சாத்திடுவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சமாதான செயலகம் கூறியுள்ளது.

# சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா ஓகஸ்டில் சீனா பயணம்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஓகஸ்ட் 28 ஆம் திகதி சீனாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சீன சனாதிபதி ஹூ ஜின்டாவின் அழைப்பின் பேரிலேயே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது.

சீனாவில் ஒரு வாரகாலம் தங்கியிருக்கும் சனாதிபதி செப்ரெம்பர் மூன்றாம் திகதி நாடு திரும்பவுள்ளார்.சீனாவில் தங்கியிருக்கும் நாட்களில் ஓகஸ்ட் 29 ஆம் திகதி பீஜிங்கில் நடைபெறவுள்ள பத்தாவது பீஜிங் பெண்கள் மாநாட்டில் அவர் பிரதான உரையை ஆற்றவுள்ளார்.

இதனைத் தவிர சனாதிபதியின் விஜயத்தின்போது கலாசாரம், கல்வி,போன்ற துறைகளில் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பலஒப்பந்தங்களும் செய்துக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் அவர் கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த சீனப் பிரதமர் பரிந்துரைத்த 300 அமெரிக்க டொலர் சீன கடன் திட்டத்தை அமுல் செய்யும் நோக்கிலான பேச்சுவார்த்தையையும் நடத்தவுள்ளார். சீன கடன் திட்டத்தின் மூலம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# தடுத்துவைக்கப்பட்டுள்ள மகாலிங்கத்தை மீட்கும் பணி வெற்றியளிக்கவில்லை

(கொழும்பு)

சோமாலியாவில் கப்பல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையின் கப்பல் தலைவரான (கப்டன்) மகாலிங்கம் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் மீட்கும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு அமைச்சின் தொடர்புகள்துறை பணிப்பாளர் ஹிமாலி அருணதிலக்க இது தொடர்பாக தெரிவிக்கையில், தாம் கென்யாவில் உள்ள இலங்கைத் தூதுவரின் ஊடாக இலங்கை கப்பல் தலைவ ரான மகாலிங்கத் துடன் நேரடியாக தொடர்பு கொள்ள பல தடவைகள் முயற்சித்ததாக தெரிவித்தார்.

கென்ய தூதரகம், உலக உணவு திட்டத்தின் ஊடாக இலங்கை கப்பல் தலைவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலுக்கு போக்குவரத்துகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். எனினும் குறித்த கப்பல் தலைவரை மீட்கும் முயற்சிகள் இன்னமும் வெற்றியளிக்கவில்லை என ஹிமாலி அருணதிலக்க தெரிவித்தார். (32)

# மேர்வின் சில்வாவின் மகன் பொலிசாரிடம் சரண்

(கொழும்பு)

பிரதி அமைச்சர் மேவின் சில்வாவன் மகனான மாலக பொலிசரிடம் நேற்று சரணடைந்தார்.கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் நண்பகல் அளவில் சரணடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் விருந்தகம் ஒன்றில் போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டிருந்தாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அவரும் பிரதி அமைச்சரின் பாதுகாப்பு பிரிவினரும் போதைவஸ்து தடுப்பு பிரிவினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இந்த நிலையிலேயே மாலக நேற்று கோட்டை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.எனினும் அவர் நேற்று மாலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் (முன்னர் வந்த செய்தி பக்கம் 8 இல் ) (32)

# சந்திரிகாவின் குறி!

பிரதமர் மகிந்தராஜபக்ஷவை எந்த நிலையிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக நியமிக்க சனாதிபதி சந்திரிகா உடன்படப்போவதில்லை என்பதையே அவரது கடந்த வார அனுராதபுர உரை உணர்த்துவதாகவுள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மிகவும் கீழ்த்தரமான முறையில் பிரதமர் மகிந்தராஜபக்ஷவைத் திருடர் என்றும் சதி செய்கிறவர் என்றும் பேசியுள்ளமை இருவருக்கும் இடையிலான முரண்பாட்டின் உச்ச நிலையையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் வரலாறு குறித்துப் புத்தகங்கள் வெளிவருவதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அதில் அவரின் குணாம்சங்கள் எவ்வறாகச் சித்தரிக்கப்பட்டிருப்பினும்சரி, சனாதிபதி சந்திரிகா தமது அதிகார அபிலாசைகளுக்காக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத்தக்கவர் என்பதே கடந்த கால நிகழ்வுகளின் வெளிப்பாடாகும்

சனாதிபதி சந்திரிகா சிறிலங்கா மக்கள் கட்சியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிரவேசித்தமையே அதிகார அபிலாசையை அடிப்படையாகக் கொண்டேஆகும்.ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் சுதந்திரக்கட்சி பெரும் சவால்களைச் சந்தித்தபோது கட்சிக்காக எதையும் செய்யாத அதேவேளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆசீர்வாதத்திற்குட்பட்டிருந்துவிட்டு– சந்தர்ப்பம் பார்த்து அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றும் சூழ்நிலை நிலவுகையிலேயே அவர் சுதந்திரக்கட்சிக்குள் பிரவேசித்தார்.

சகோதரரான அநுரா பண்டாரநாயக்கா தமது கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேறி ஐ.தே.கட்சியில் இணையும் அளவிற்கு வெறுப்புறும் வகையில் சந்திரிகாவின் செயல்கள் இருந்தன என்பதே உண்மையாகும்.

சனாதிபதி சந்திரிகா அதிகாரத்தை தக்கவைப்பதற்காக எத்தகைய சனநாயக விரோதச் செயல்களையும் கையாளத் தயங்கப்போவதில்லை என்பது அவர் பெரும்பான்மை அரசாங்கமாக இருந்த ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்ததில் இருந்தே அனைவரும் புரிந்து கொள்ளமுடியும்

சனாதிபதி சந்திரிகா தேர்தல்களில் வெற்றி பெற்று சனாதிபதிப் பதவி ஏற்றிருக்கலாம்.ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களில் நிறைவேற்று அதிகாரத்தை தனது தேவைக்கு ஏற்ற வகையில் உயர்ந்தளவில் துஷ்பிரயோகம் செய்த சனாதிபதியாக இவரே உள்ளார். அவ்வாறு இல்லாது விட்டால் சனாதிபதித் தேர்தலில் இருமுறை பெற்ற வெற்றிக்காக மூன்று முறை சத்தியப் பிரமாணம் செய்ததாக அவர் சாதிக்க முற்பட்டிருக்கமாட்டார் .

இதனைத்தவிர இன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, ஜே.வி.பி.யுடன் தேர்தல் கூட்டொன்று செய்து கொண்டமை பெரும் தவறு என்றும் ஆரம்பம் முதலே தனக்கு இவ் உடன்பாட்டில் விருப்பம் இருக்கவில்லை எனவும் சிலரின் தொடர் வற்புறுத்தலினாலேயே மேற்கொண்டதாகவும் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது.

எவ்வாறானாலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்பட்ட சனாதிபதி சந்திரிகா ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற ஜே.வி.பி. யுடன் கூட்டுச்சேருவதைத் தவிர வேறுவழி இல்லை என்ற நிலையில் அதிகாரத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தார்.

இன்று அவர் ஜே.வி.பி.யுடன் பெரும் சீற்றம் கொண்டிருப்பதற்குக் காரணம் ஏதோ சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவப் பொதுக்கட்டமைப்பிற்கு ஜே.வி.பி.எதிர்ப்புத்தெரிவிப்பதினால் அல்ல. சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்பார்க்கைக்கு ஏற்ப ஜே.வி.பி. நடந்து கொள்ளாமையாலும் சனாதிபதியை உதாசீனம் செய்ய முற்பட்டுள்ளமையாலுமேயாகும். அதாவது சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கோ அன்றி அவர் அரசியல் அதிகாரத்தில் நீடிப்பதற்கான மாற்றங்களை மேற்கொள்வதற்கோ ஜே.வி.பி சம்மதிக்காததோடு. மாறாக ஜே.வி.பியினருக்கு சனாதிபதிப் பதவியிலும் ஆட்சி அதிகாரத்திலும் விருப்பு ஏற்பட்டமையே காரண மாகும்

இது ஒருபுறம் இருக்க இன்று கட்சியிலாயினும் தனது அதிகாரம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்காக சுதந்திரக் கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான நிலைப்பாட்டை சந்திரிகா எடுத்துள்ளார். கட்சிக்குப் பாதிப்பு விளையலாம் என்பது அறியப்பட்டதாக இருப்பினும் தனக்கு விருப்பமற்றவர் தனது அபிலாசைகளை மதிக்காதவர் கட்சியின் தலைவராகவோ சனாதிபதி வேட்பாளராகவோ வர அனுமதிக்க முடியாது என்பதில் அவர் உறுதியாகவுள்ளார்.

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க குடும்பம், கட்சி என்பனவற்றிற்கும் அப்பால் ஆட்சி, அதிகாரம் என்பனவற்றையே குறியாகக் கொண்டவராவர். அவ்வாறு இல்லாதுவிடில் கணவரின் கொலையில் தொடர்புள்ளவர்களுடன் ஆட்சி அதிகாரத்திற்காக அவர் எவ்வாறு கூட்டணி சேர்ந்திருக்க முடியும்? சமாதானத்தின் பெயரில் யுத்தத்தை எவ்வாறு நடத்தியிருக்க முடியும்? சனநாயகத்தின் பேரில் ஒரு பெரும்பான்மை அரசாங்கத்தை எவ்வாறு கலைத்திருக்க முடியும்?

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி நேற்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நேற்று ஜே.வி.பி போராட்டங்களை நடத்தியுள்ளது. இதில் முக்கியமான எதிர்ப்புப் பேரணி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மாலை 4.30 மணிக்கு இடம் பெற்றது. இப் பேரணியில் விமல் வீரவன்ச _ பல ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் களுத்துறை, புத்தளம், கண்டி, மாத்தளை, மொனராகலை இரத்தினபுரி அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன.

## வடக்குகிழக்கு மாகாணப்பாடசாலைகளில் 3095 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் 1864தமிழ்மொழிமூலம் பட்டதாரிகளையும் 504 சிங்கள மொழிமூலப்பட்டதாரிகளையும் ஆசிரியர்களாக நியமிக்கவும் 727 பட்டதாரிகளை (தமிழ்மொழி மூலம் 629, சிங்கள மொழி மூலம் -98) திட்டமிடல் நிதி உதவியாளர்களாகவும் நியமிப்பதற்கு திறைசேரி அங்கீகாரம் அளித்திருப்பதாக, வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் திட்டமிடல்/ நிதி உதவியாளர் ஆகியோரின் பெயர்விபரங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதி ஆகியன பத்திரிகை மூலம் விரைவில் வெளியிடப்படவிருப்பதாக மாகாணக்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளைவடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேலும் 600 தமிழ் மொழிமூலப்பட்டதாரிகளையும் 250 சிங்கள மொழிப்பட்டதாரிகளையும் நியமிப்பதற்கு அங்கீகாரம் தரும்படி கோரி வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், கொழும்பு கல்வி அமைச்சையும் திறைசேரியையும் கேட்டுள்ளார். என்றும் மாகாணக்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

## திருமலையில் இராணுவச் சிப்பாய் நண்பரால் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அவரது நண்பரால் சுட்டுக்கொல்லப்பட் டார். நேற்று இரவு 8.15 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவம் குறித்து தெ பவருவதாவது வில்கம் விகாரைய பணியாற்றும் இவரது நண்பருக்கும் இவருக்குமிடையே பெரும் வாக்குவாதம் மூண்டதாகவும் திடீரென சிப்பாயின் துப்பாக்கியைப் பறித்த நண்பர் சிப்பாயைச் சுட்டுக் கொன்று விட்டு தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில் குழு மோதல்கள்; எட்டுப்பேர் படுகாயம்

யாழ்.குடாநாட்டில் இளைஞர் குழுக்களுக்கிடையேயான ஆயுதம் தாங்கிய சண்டைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் எட்டுப் பேர் வைத்தியசாலைகளில் காயங்களுடன் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்லியடியில் நேற்று மாலை 3.30 மணியளவில் இரு இளைஞர் குழுக்களுக்கி டையே இடம் பெற்ற சண்டையில் வாள்கள், கத்திகளினால் வெட்டப்பட்டு மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சண்டையில் ஈடுபட்ட இருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பிற்பகல் 5.30 மணியளவில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடிப் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உதயகுமார் (வயது-26), புலேந்திரன் (வயது19), சற்குணராசா (வயது-37) ஆகியோர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இணுவில் மஞ்சத்தடிப் பகுதியில் மாலை 6.30 மணியளவில் மரம் தறிப்பதில் இடம் பெற்ற வாக்குவாதம் முற்றியதைத்தொடர்ந்து மீசாலைப்பகுதியைச்சேர்ந்த வர்களான சி. சுகந்தன் (வயது-29), ப. சசிக்குமார் (வயது 30)ஆகிய இருவரும் வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (41)

## புலிகளின் பயணத்திற்கு பாதுகாப்பளிப்பது ஒப்பந்தப்படி அரசின் தார்மீகக் கடமை

**-முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக்க**

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பகுதியினுள் ஆயுதமற்ற விடுதலைப்புலிகளின் நடமாட்டத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டிருக்கின்றது.

முன்னைய ரணில்விக்கிரமசிங்கவின் அரசு இதனை செய்திருக்கின்றது. தற்போதைய அரசும் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க ஒப்புக் கொண்டிருக்கின்றது. எனவே ஒப்புக் கொண்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவது அரசின் தார்மீகக் கடமை என முன்னாள் விமானப் படைத் தளபதியும் இராணுவ விமர்சகருமான எயர்வைஸ்மார்ஷல் ஹரி குணத்திலக்க கூறியுள்ளார்.

பி.பி.சி.க்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றின் போதே ஹரி குணதிலக்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அந்தச் செவ்வியில் மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகளால் கேட்கப்பட்ட பாதுகாப்பை அடிக்கடி வழங்குவதென்பது நிச்சயமாக இராணுவத்தின் மீது பயங்கரமான பழுவினைச் சுமத்தும் நடவடிக்கை என்றும், அவ்வாறான பாதுகாப்பு வழித்துணையை வழங்க ஏற்கனவே ஒப்புக்கொண்டிருப்பதால் அதனைத் தொடர்ச்சியாக வழங்க வேண்டியது அரசின் பொறுப்பென தான் கருதுவதாகவும் கூறினார்.

ஆனால் ஒரு மாதத்திற்கு எத்தனை, தடவை கிழமைக்கு எத்தனை தடவை எவ்வளவு எண்ணிக்கையானோர் செல்வது என்ற விடயத்தில் சில நிபந்தனைகள் விதிக்கப்படலாம்.

இதேவேளை யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரும் இந்த மூன்றரை வருடகால யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாரிய சவால்களையும் ஆபத்தையும் முதல் முறையாக இப்போது சந்தித்திருக்கிறது என்று கூறுகின்றார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன என ஹரி குணத்திலக்கவிடம் கேட்ட போது,

ஆம் அது ஆபத்தில் தான் சிக்கி இருக்கின்றது. வெகு சீக்கிரத்தில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டு விடுமோ என்ற கேள்வியே இன்று இலங்கையர் ஒவ்வொருவரது மனங்களிலும் எழுந்துள்ளது. ஆனால் நாடு யுத்தத்தின் விளிம்பில் என்று நான் கூறமாட்டேன். நாடு மோதல்களின் விளிம்பில் தான் நிற்கின்றது என்றே கூறுவேன் என்றார்.

இதேவேளை அதிகரித்த இராணுவ முகாம்கள் சோதனைகள் போன்றவற்றினாலும் நாளாந்தம் சராசரி இரண்டு தொடக்கம் மூன்று பேர் வரை கொல்லப்படுவதாலும் யுத்தம் ஏற்படும் நிலை உள்ளதென்பதை கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரைக்கும் இந்த நிலை தொடரும். ஆகவே இந்த விடயத்தில் வெகுசீக்கிரம் தீர்வொன்று காணப்பட வேண்டியது நாட்டின் ஒட்டுமொத்த சமாதானத்திற்கு மிகவும் அவசியமானது எனவும் அவர் மேலும் கூறினார்.

## ஆழிப்பேரலை நிதியினை பிரதமர் மோசடி செய்யவில்லை

ஆழிப்பேரலை நிவாரண நிதியை சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மோசடி செய்யவில்லை என்று விசாரணை அதிகாரிகள் அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆழிப்பேரலை நிவாரண நிதியில் 83 மில்லியன் ரூபாயை மகிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு மாற்றியதாக ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்திருந்தது.

இம்முறைப்பாடு மீது குற்றப்பிரிவுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தினர். மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர்கள் உள்ளிட்டோரிடம் இது குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணை முடிவுகளை சட்டமா அதிபரிடம் குற்றப் பிரிவு திணைக்களம் கையளித்துள்ளது. அதில் நிவாரண நிதியை மகிந்த ராஜபக்ஷ மோசடி செய்யவில்லை என்று கூறியுள்ளதாகத் தெரிகிறது.

### இராணுவத்துடன்..

துரதிஷ்டவசமானது.

யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்டுவிட்டன. இது குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழு முழு திருப்தியை வெளிப்படுத்தியி ருக்கிறது. கருணா குழுவையோ வேறு ஆயுதக்குழுவையோ சிறிலங்கா அரசு ஆதரிக்கவும் இல்லை அனுமதிக்கவும் இல்லை.

மக்களின் பாதுகாப்பிற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எமது அரசு மேற்கொண்டுதான் வருகிறது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் சிறுவர்களை படையணியில் சேர்ப்பதுடன், சிறிலங்கா இராணுவம் பொலிஸ் மற்றும் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தோரை படுகொலை செய்து வருகின்றனர்.

கடந்த மூன்றரை ஆண்டுகால நிறுத்த ஒப்பந்த காலத்தில் எத்தனையோ நிகழ்வுகள் நடந்த போதும் இருதரப்பு நம்பிக்கையை உருவாக்கவும் பாதுகாப்பை அதிகப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகளுக்கு இணைத்தலைமை முன்முயற்சி எடுப்பது குறித்து வரவேற்கிறோம் என்றார் சந்திரிகா.

இச்சந்திப்பில் சிறிலங்காவுக்கான அமெரிக்க தூதர் ஜெப்ரி லங்கஸ்டெட் பிரித்தானிய தூதுவர் எஸ்.என். இவான்ஸ் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் நோர்வே தூதரக அதிகாரி ஓட்வர் லேக்ரிட், ஜப்பான் சார்பில் தூதரக அதிகாரி ஹிரோச்சி கரூப் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறிலங்கா அரசுத்தரப்பில் சனாதிபதி சந்திரிகாவுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வெளிவிவகார அமைச்சுச் செயலர் பலிகக்கர ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சமாதான...

இதேவேளை அமெரிக்காவின் யு.எஸ் எய்ட் நிறுவனம் சுனாமியின் பின்னரான அபிவிருத்திகளுக்காக மேலும் 57.2 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. (32)

### நவம்பரில்...

ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தற்போது அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் ஒருவரிடம் தெரிவித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கொழும்பு நாளேடு ஒன்று அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர் கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டதாக அந்த நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

தமது முடிவு எதனையும் தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக வெளியிடாது விட்டாலும் அரசாங்கத்திற்கு நிலைமையை அவர் விளக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

### தமிழர்...

தொடர்ந்து முல்லை. பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் மனோ தலைமையில் கண்டன உரைகள் ஆரம்பமானது. கண்டன உரைகளை முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் உறுப்பினர் அருணாசலம் முல்லை.உதவிப்பங்குத்தந்தை திருமகன் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மகஜர்களை வர்த்தக சங்கத்தலைவர் மனோ, கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் பொதுமுகாமையாளர் சிவலிங்கம் ஆகியோர் வாசித்து கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. றங்கனிடம் கையளித்தனர். மகஜரினை பெற்றுக் கொண்ட பொறுப்பாளர் பதிலுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

### கண்காணிப்பு...

சில புதிய பிரேரணைகள் விடுதலைப் புலிகளின் கவனத்திற்காக கண்காணிப்புக் குழுவினூடாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் இந்தப் புதிய பிரேரணைகள் குறித்து கலந் லோசித்து விட்டு மீண்டும் தங்களைச் சந்திப்பார்கள் எனவும் கூறினார்.

இதேவேளை இச்சந்திப்புக் குறித்து கண்காணிப்புக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில்,இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைந்ததாகவும் ஆனால் இது தொடர்பாக இறுதித் தீர்வெதுவும் எட்டப்படவில்லையெனவும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் இந்த விடயம் குறித்து அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிலவுகின்ற இடைவெளியைக் குறைக்கும் நோக்குடன் அரச தரப்பில் இருந்து மேலும் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. அவர் ற எழுத்து மூலம் கேட்டுள்ளோம். அவை உடனடியாக விடுதலைப்புலிகளிடம் சேர்ப்பிக்கப்படும்.

இதுதொடர்பாக விடுதலைப்புலிகளும் மேலும் சில எதிர் பிரேரணைகளைத் தரக்கூடும். ஆனால் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கஷ்டமான பிரச்சினைக்கு விரைவில் ஒரு சுமுகமான தீர்வொன்றினைக் காண நெருங்கி வந்திருக்கின்றோம் என்றார் அவர்.

### தமிழ்ச்செல்வன்...

ரஞ்சனும், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அரசு தரப்பில் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்த புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்கவும் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதனிடையே சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் சண்முகலிங்கம் ரஞ்சன் ஆகிய இருவரும் யாழ்.மாவட்ட நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதியினுள் வசிக்கவில்லையெனவும் அதனால் அழைப்பாணையை நீதிமன்ற தூதுவர் (பிஸ்கால்) மூலமோ அல்லது பொலிசார் மூலமோ விநியோகிக்க முடியாதுள்ளதாக கூறி அவ்வழைப்பாணைகளை யாழ்.மாவட்ட நீதிமன்று மீண்டும் கொழும்பு மேல்நீதிமன்றிக்கு திருப்பியனுப்பியுள்ளதாக கூறப்படுகின்றது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி நம் புனிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.